பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 தை 02 திங்கட்கிழமை 15.01.2018 கதிர் 69

### சம்பந்தனின் அலுவலகத்தில் இன்று பொங்கல்

எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனின் அலுவலகத்தில் தைப் பொங்கல் நிகழ்வு இன்று காலை 9.30 மணி முதல் நடைபெறவிருக்கின்றது. சபாநாயகர் கரு ஜெயசூரியவும் பிற நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதில் பங்குபற்றுவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## பொறுப்புக் கூறலை நிறைவேற்றுமாறு

# இலங்கை மீது அமெ.அழுத்தத்தை வலியுறுத்துகிறார் முதல்வர் விக்கி

### தூதுவரை நேரில் சந்தித்துத் தெரிவிப்பு



**கொழும்பு, ஜனவரி 15**

**ஜெனீவாவில் மனித உரிமைகள் கவுன்ஸிலில் தானும் சேர்ந்து ஏகமனதாக நிறைவேற்றிய தீர்மான வாசகங்களின்படி, இலங்கையில் யுத்த காலத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் தொடர்பில் தனது பொறுப்புக் கூறலை நிறைவேற்றுவதற்கு இலங்கை மீது அமெரிக்கா அழுத்தம் பிரயோகிக்க வேண்டும்.**

**- இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரை நேரில் சந்தித்து வலியுறுத்திக் கோரிக்கை விடுத்திருக்கின்றார் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்.**

பக்கம் 18

### மூன்றரைக் கோடி ரூபா கஞ்சா சிலாபத்துறை பகுதியில் மீட்பு



மன்னார் – சிலாபத்துறை பகுதியிலிருந்துவெளிஇடம் ஒன்றுக்கு எடுத்துச் செல்லப்பட இருந்த சுமார் மூன்றரைக் கோடிரூபாபெறுமதியான கேரளா கஞ்சாப் பொதிகள்

பக்கம் 18

### தேர்தல் விதி மீறல்களுக்காக 167 பேர் இதுவரையில் கைது

கொழும்பு,ஜன.15

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பான பல்வேறு சம்பவங்களுக்காக இதுவரையில் 18 வேட்பாளர்கள் உள்பட 167 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

167 பேரும் கடந்த 09ஆம் திகதியிலிருந்து நேற்றுக் காலை 6 மணி

பக்கம் 18

### ஜனாதிபதியும் பிரதமரும் குற்றம் செய்யாதவர்கள்!

**சான்றிதழ் கொடுக்கிறார் சந்திரிகா**



கொழும்பு,ஜன.15

இந்த அரசாங்கத்திலுள்ள ஜனாதிபதியும், பிரதமரும் நிதி மோசடியில் ஈடுபடவில்லை எனவும், அவர்களினால் நியமிக்கப்பட்டவர்களே அவ்வாறு செய்திருக்கின்றனர் எனவும், அவர்களும் தண்டிக்கப்படுகிறார்கள் எனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின்போஷகரும்,

பக்கம் 18

### முதன்மை வேட்பாளர் வீட்டின் மீது மாங்கேணியில் நேற்றுத் தாக்குதல்!

மன்னார்,ஜன.15

மன்னார் – மாந்தை மேற்கு பிரதேச சபை பிரிவில் உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிடும் ஒரு கட்சியின் முதன்மை வேட்பாளர் வீட்டின் மீது மாற்றுக் கட்சியைச் சார்ந்த குழு ஒன்று தாக்குதல் நடத்தியுள்ளதாகஅடம்பன்பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று ஞாயிற்றுக் கிழமை அதிகாலையில்.

பக்கம் 18

### 4 துப்பாக்கிகள், 117 ரவைகளுடன் கரந்தெனியாவில் ஒருவர் கைது!

**புலிகளின் ஆயுதங்கள் எனச் சந்தேகம்**



4 துப்பாக்கிகள், 117 ரவைகள் மற்றும் கைக் குண்டுகளுடன் 37 வயதுடைய ஒருவர், கரந்தெனிய பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டில்உற்பத்தி செய்த ஆயுதங்கள் பல வற்றுடன் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிஒன்றும்அவற்றுள் அடங்குகின்றது.

இந்த நபரிடமிருந்து 4 கையடக்கத்தொலைபேசிகளும்மீட்கப்பட்டுள்ளன, தமிழீழவிடுதலைபுலிகள் அமைப்பின் உத்தியோகபூர்வஇலச்சினையுடனான.

பக்கம் 18

### வேட்பாளர்களின் பின்னணியை ஆராய அதிகாரிகளுக்குப் பணிப்பு

கொழும்பு,ஜன.15

நடைபெறவுள்ள உள்ளூராட்சிசபைகளுக்கான தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பின்னணி தொடர்பில் ஆராயுமாறு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்குப் பணிக்கப்பட்டுள்ளது. வேட்பாளர்களாகவுள்ள முன்னாள் அரசஉத்தியோகத்தர்கள் தொடர்பில் கூடுதல் கவ

பக்கம் 18

### ‘மைக்ரோ சிப்’ கடவுச்சீட்டு இந்த ஆண்டில் விநியோகம்

கொழும்பு,நவ.15

ஒவ்வொருவரினதும் உயிரியல் தரவுகளை உள்ளடக்கிய விவரங்களைக் கொண்ட – ‘மைக்ரோ சிப்’ (நுண் தகடு) பொருத்தப்பட்ட புதிய வகை கடவுச்சீட்டு இந்த ஆண்டு வழங்கப்படும் என்றுகுடிவரவு, குடியகல்வுத் திணைக்களக் கட்டுப்பாட்டாளர்அதிபதிஸ்.ரணசிங்க தெரிவித்தார்.

இந்தப் புதிய வகைக் கடவுச் சீட்டின் ஊடாகப்

பக்கம் 18

### வவுனியாவில் கோர விபத்து; இரு இளைஞர்கள் மரணம்



வவுனியா, ஜன.15

வவுனியா ரயில் நிலைய வீதியில் நேற்று முன்தினம் நள்ளிரவுஇடம்பெற்றகோரவிபத்தில்இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

வவுனியா நகரில் இருந்து

பக்கம் 18

### ஏமாற்றும் தமிழ்த் தலைமையிடமிருந்து மக்களைக் காக்கவே எழுச்சிப் பாடலாம்!

**இப்படி விளக்கம் தருகின்றார் அங்கஜன்**

யாழ்ப்பாணத்தில்அண்மையில் நடைபெற்ற ஸ்ரீ.சு. கட்சியின் தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டு நிகழ்வில் விடுதலைப் புலிகளின்எழுச்சிப்பாடல் ஒலிக்க விடப்பட்டமைக்கு அங்கஜன் இராமநாதன் நேற்று விளக்கமளித்துள்ளார்.

பக்கம் 18




நல்லாட்சி அரசு ‘பெருங்குடி’ மக்களுக்குத் தனது தாராளத்தைநன்குகாட்டியிருக்கின்றதுஎன்றுமூன்று நாள்களுக்கு முன்னர் இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

அதற்கு இப்போது

பக்கம் 18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சப்ரகமுவ முன்னாள் முதலமைச்சர் மஹிந்த அணியில் இணைந்தார்!





கொழும்பு,ஜன.15

சப்ரகமுவ முன்னாள் முதலமைச்சர் மஹிபால ஹேரத் நேற்றுமுன்தினம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவுடன் இணைந்தார்

சப்ரகமுவ மாகாண முன்னாள் முதலமைச்சர் மஹிபால ஹேரத், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ தலைமையிலான சிறிலங்கா பொது ஜன முன்னணியுடன் நேற்று முன்தினம் மாலை இணைந்து கொண்டுள்ளார்.

கேகாலையில் சனியன்று மாலை பொதுஜன முன்னணியின் சார்பில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுபவர்களை ஆதரித்து மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் இவர் தனது ஆதரவை அக்கட்சிக்கு வழங்கினார்.

இவரது மகன் கனக ஹேரத் எம்.பி., மஹிந்த ராஜபக்ஷ அணியுடன் இணைந்து அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தவர் என்பதும் குறிப் பிடத்தக்கது.

சப்ரகமுவ மாகாண சபை கடந்த 2017 செப்ரெம்பர் மாதம் 27 ஆம் திகதி முதல் ஆளுநரின் அதிகாரத்தின் கீழ் உள்ளமை குறிப்பிடத்தக்கது. இறுதியாக அம் மாகாணத்தின் முதல மைச்சராக மஹிபால ஹேரத் பதவி வகித்தார் என்பது குறிப்பிடத்தக் கது.

(உ)

# கூட்டமைப்பு வேட்பாளரின் அலுவலகத்தின் மீது தாக்குதல்

## மட்டு. புத்தூரில் சம்பவம்



மட்டக்களப்பு- புத்தூர் பகுதியில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளரின் அலுவலகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகர சபை தேர்த லில் 20ஆம் வட்டாரத்தில் போட்டியிடும் வேட்பாளரின் அலு வலகம் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அலுவலகத்தின் மேற் பகுதியில் இருந்த மேற்படி வேட்பாளரின் பதாகை சேதப்படுத்தப்பட்டுள்ள தாக பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட் டுள்ளது.

அந்தப் பகுதிக்குச் சென்ற மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப் பினர் எஸ்.வியாழேந்திரன், அலுவலகத்தை பார்வையிட்டமையுடன் சம்பவம் தொடர்பில் கேட்டறிந்தார். இந்தத் தாக்குதல் சம்பவத்திற்கு கடுமையான கண்டனத்தை தெரிவித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தோல்வி பயத்தில் இருப்பவர்களே இவ்வாறான செயற்பாடுகளைச் செய்கின்றனர் எனவும் குறிப் பிட்டார்.

(உ)

# நாவற்குழியில் மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,ஜன.15

இலங்கை இராணுவமும் கொழும்பு பல்கலைக்கழகமும் இணைந்து நாளை மறுதினம் புதன் கிழமை காலை 8 மணி முதல் சாவகச்சேரி, நாவற்குழி கலா சார மண்டபத்தில் மருத்துவ முகாம் ஒன்றை நடத்தவிருப்பதாக இராணுவத்தின் பலாலி தலைமையகம் தெரிவித்துள்ளது. நாவற் குழியில் வசிக்கும் சகல மக்களுக்கும் இந்த வைத்திய முகாம் பயனுள்ளதாக அமையும் என்றும் பலாலி தலைமையகச் செய்திக் குறிப்பு தெரிவிக்கின்றது.

(உ)

# பேரவையின் கருத்தமர்வு வீரசிங்கம் மண்டபத்தில்!

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் தலைமையில்



யாழ்ப்பாணம், ஜன.15

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் நாளை 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடை பெறவிருந்த கருத்தமர்வும் கலந் துரையாடலும் நிகழ்வு யாழ் வீர சிங்கம் மண்டபத்திற்கு இடம் மாற்றப்பட்டுள்ளது.கைலாசபதி கலையரங்கத்தைப் பயன்படுத்து வதற்கான அனுமதி தேர்தல் திணைக்கள நெருக்கடியை அடுத்து இரத்துச் செய்யப்பட்ட தால் அந்த நிகழ்வு கேள்விக்குள் ளாகியிருந்தது.

இந்நிலையில் அது கைலாசபதி அரங்கிலிருந்து யாழ் வீரசிங்கம் மண்டபத்திற்கு இடம் மாற்றப்பட் டுள்ளதாக தமிழ் மக்கள் பேரவை யின் ஊடக இணைப்பாளர் தெரி வித்துள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர்களில் ஒருவ ரான முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனின் தலை மையில் நாளை மாலை 4 மணிக்கு யாழ். இந்நிகழ்வு இடம்பெறும்.

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகத்தின் சட்டத்துறைப் பேரா சிரியர் முத்துக்குமாரசாமி சொர் ணராஜா 'வடக்கு கிழக்கு தமிழர் தம் உரிமைகளின் கேடயமாக சர்வதேச சட்டம்' என்ற தலைப் பிலும் –

யாழ்.பல்கலைக்கழகத்தின் சட்டத்துறைத் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் குமாரவடிவேல் குருபரன் 'இடைக்கால அறிக்கை மாயைகளைக் கட்டுடைத்தல்' என்ற தலைப்பிலும் உரையாற்றுவர்.

(உ)

# மது விற்பனைச் சட்டம் தளர்வு; சு.கவின் அறிவிப்பு விரைவில்!



நாட்டிலுள்ள மதுபான விற்பனை நிலை யங்களைத் திறப்பதற்கு வழங்கப்பட் டிருந்த நேரத்தை நீடிப்பதற்கும், பெண்கள் மதுபான விற்பனை, கொள்வனவில் ஈடுபடு வதற்கு அனுமதி வழங் குவதற்கும் அரசாங்கம் சட்டம் உருவாக்கியமை தொடர்பில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி விசேட அறிவிப்பொன்றை விடுக்கத் தீர்மானித்துள் ளது.

நிதி அமைச்சால் முன் னெடுக்கப்பட்டுள்ள இந்தத் தீர்மானம் குறித்து அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு எந்தவித அறிவிப்பும் செய்யப்படவில்லை என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள் ளார்.

இந்த நடவடிக்கை ஜனாதிபதியின் கொள்கைக்கு எதிரானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஓரிரு தினங்களில் இது தொடர்பான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விசேட அறிவிப்பொன்றை நாட்டு மக்க ளுக்கு விடுக்கவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(உ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# முதுகெலும்பு இருந்தால் சு.கவினை விட்டு விலகி புதுக்கட்சியைக் கட்டியெழுப்புங்கள்!


மைத்திரி சவால்

புதிய கட்சியைக் கட்டியெழுப்புகின்றவர்கள் அரசியலில் முதுகெலும்புள்ளவர்களாயின் அவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியிலிருந்து விலகி அக்கட்சியை அமைக்க வேண்டும்.

புதிய கட்சியில் உறுப்புரிமையை பெற்றுக்கொள்ளவில்லை என ஊடகக் கலந்துரையாடலில் குறிப்பிடுகின்றவர்கள் சுதந்திரக் கட்சியல்லாது வேறு கட்சிக்கு வாக்களிக்குமாறு மக்களுக்கு கூறுவது நகைப்புக்கிடமானதாகும். அவர்கள் மனசாட்சிக்கேற்ப அரசியலில் ஈடுபட வேண்டும்.

– இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

நேற்றுப் பிற்பகல் ஹோமாகம பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:–

மஹிந்த ராஜபக்ஷ தரப்பு உருவாக்கியுள்ள ஸ்ரீலங்கா பொது ஜனபெரமுன கட்சி தொடர்பிலேயே இப்படிப் பெயர் குறிப்பிடாமல் ஜனாதிபதி சூசமாகக் கருத்துக் கூறினார்.

“புதிதாக அமைக்கப்பட்டுள்ள அக்கட்சியின் செயலாளரும் தலைவரும் சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் கடந்த அரசாங்கத்தில் உயர்பதவிகளை வகித்தவர்களாகவும் உள்ளனர். இன்று சுதந்திரக் கட்சியில் இருந்துகொண்டு அவர்கள் மேற்கொண்டு வருகின்ற விடயம் இரண்டாவது பண்டாரநாயக்க படுகொலையாகும்.

“இன்று தமது அரசியல் அலுவலகங்களுக்கு பண்டாரநாயக்கவினதும் அம்மையாரினதும் உருவப்படங்களை அவசியமாக கருதுகின்றவர்கள், அன்று சுதந்திரக் கட்சியில் மத்திய செயற்குழுக் கூட்டத்தின்போதும் ஏனைய நிகழ்ச்சிகளின்போதும் ‘பண்டாரநாயக்கவை நினைவு கூருமாறு’ நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டிருந்த விடயத்தை கட்சியின் ‘முன்னாள் தலைவர்களை நினைவு கூருதல்’ என்று மாற்றுவதற்கு ஆலோசனை வழங்கியவர்கள் தான்.

“ஊழல், மோசடிகளை ஒழித்துக் கட்டுவதிலும் ஊழல், மோசடிகளில் ஈடுபடுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதிலும் நான் ஈடுபட்டுவருவது நாட்டு மக்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையின் அடிப்படையில் தான்.

“நான் சுகாதார அமைச்சராக இருந்தபோது நாட்டு மக்களுக்காக மேற்கொண்ட தீர்மானங்களின் காரணமாக புகையிலைக் கம்பனிகள் உள்ளிட்ட பல்தேசிய கம்பனிகள் என்னுடன் கோபித்துக் கொண்டன. போதைப் பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் காரணமாக போதைப்பொருள் வியாபாரிகள் என்னை எதிரியாக ஆக்கிக்கொண்டனர்.

இன்று ஊழல், மோசடிக்கு எதிராக ஆணைக்குழுக்களை அமைத்து வருவதும் இலகுவான விடயமல்ல.

எனினும் இந்நாட்டு மக்கள் என்னுடன் இருக்கின்றனர். இந்த மக்கள் நம்பிக்கையுடன் நாட்டுக்காக முன்னெடுத்துள்ள நிகழ்ச்சித் திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுப்பேன். – என்றார் அவர். (உ)

## பிரி. தமிழர்களுக்கு பிரதமர் மே தைப்பொங்கல் நல்வாழ்த்து



லண்டன், ஜன.15

பிரிட்டனில் வாழும் தமிழர்களுக்கு அந்நாட்டு பிரதமர் தெரீசா மே தைப்பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

வாழ்த்துத் தெரிவித்து தனது டுவிட்டர் பக்கத்தில் ஒரு காணொளியை அவர் பதிவேற்றி உள்ளார். அதில் பேசியுள்ள பிரதமர் தெரீசா, தமிழில் ‘வணக்கம்’ எனக்கூறி தன் உரையை தொடங்கியுள்ளார்.

பிரிட்டனில் உள்ள தமிழர்கள் மற்றும் உலகில் உள்ள அனைத்து தமிழர்களும் தைப் பொங்கல் கொண்டாட ஒன்று சேர்ந்துள்ளனர் என அவர் குறிப்பிட்டார்.

பழையவற்றை விடுத்து, புதிய வாய்ப்புகளைத் தக்க வைத்துக் கொள்ளும் நேரமிது. அறுவடைக்கு மட்டுமல்ல, நண்பர்கள், உறவினர்கள் ஆகியோருக்கும் இது நன்றி தெரிவிக்கும் நேரம். – என்றார் அவர்.

பிரிட்டனில் உள்ள தமிழர்கள் அந்நாட்டிற்கு ஆற்றிய பங்கைளிப்பை நினைவுபடுத்த இது ஒரு நல்ல வாய்ப்பு எனக் குறிப்பிட்டமே, தமிழ் சமூகத்தை வாழ்த்தியுள்ளார்.

பிரிட்டனை பரந்துபட்ட நாடாக்கியதில் தமிழர்களின் பங்கு மிகப்பெரியது என்றும் பிரட்டன் பிரதமர் தெரீசா மே தெரிவித்தார்.

## போதை, கருக்கலைப்புக்கான வில்லைகளுடன் இருவர் கைது

சட்ட விரோத போதைப்பொருள் மாத்திரைகள் 4,000 மற்றும் 1,260 கருக்கலைப்பு மாத்திரைகளுடன் கட்டுநாயக்க விமானநிலையத்தில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

4,000 எபல் போதைப்போருள் மாத்திரைகள், 1,260 கருக்கலைப்பு மாத்திரைகள் (Contirakit), 50 மாவா எனும் போதைப்பொருள் அடங்கிய தகரங்கள் மற்றும் விற்றமின் D உள்ளடங்கிய சிறிய போத்தல்கள் - 90 ஆகியவற்றுடன் இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க விமானநிலைய பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவினால் நேற்றுக் காலை 8.30 மணியளவில் விமான நிலையத்தின் பயணிகள் வருகை தரும் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பில், இவை கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

ஹெந்தளை, வத்தளை பகுதியைச் சேர்ந்த 62, 27 வயதுடைய இரு சந்தேகநபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களை இன்று மினுவாங்கொடை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கட்டுநாயக்க பொலிஸார் தெரிவித்தனர்.

## வீணைக்கு அளிக்கப்படும் வாக்குகள் என்றும் வீணாகாது என்கிறார் டக்ளஸ்

வீணைக்கு அளிக்கும் வாக்குகள் பெறுமதியானவையாக இருக்கு. அவை ஒருபோதும் வீணாகப் போவதில்லை.

– இவ்வாறு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சிமன்ற தேர்தலை முன்னிட்டு கொடிகாமம் – தவசிகுளம் பகுதியில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

உள்ளூராட்சிமன்ற தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இன்றுள்ள சாதகமான சூழலைப் பயன்படுத்தி நிச்சயம் இந்தச் சபைகளை நாம் வென்றெடுக்க வேண்டும். அவ்வாறு நாம் வென்றெடுக்கும் பட்சத்தில் இங்கு உங்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு நாம் இலகுவில் தீர்வுகாண்பதற்குரிய சந்தர்ப்பம் கிட்டும்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் மட்டுமல்லாது எதிர்காலத்தில் மாகாணசபைத் தேர்தலிலும் எமது மக்கள் எமக்கு வெற்றி வாய்ப்புக்களைத் தருவார்களேயானால் இன்று மாகாணசபையைக் கொண்டு நடத்த முடியாதவர்களுக்கு நாம் எமது சிறந்த செயற்றிட்டங்கள் ஊடாக தகுந்த பாடத்தை புகட்டுவோம்.

மக்களின் வாழ்வியல் மேம்பாட்டுக்காக அரசிடம் இருந்து கிடைக்கும் நிதியை மட்டுமன்றி, வெவ்வேறு மூலோபாயங்களைக் கொண்டு நிதியைப் பெற்றும் எமது பகுதிகளை நாம் அபிவிருத்தியால் தூக்கி நிறுத்துவோம்.

இன்றுள்ள வடக்கு மாகாணசபை 300 க்குமேற்பட்ட தீர்மானங்களை மட்டும் நிறைவேற்றியிருக்கின்றதே தவிர, அதனை நிர்வகிக்கின்றவர்களால் வேறு எதனையும் செய்ய முடியாது போயுள்ளது. தீர்மானங்களை நிறைவேற்றுவது மட்டுமல்ல, அவற்றை செயற்படுத்துவதே முக்கியமானவிடயமாகும். இதை இன்றுள்ள வடக்கு மாகாணசபை தவறவிட்டுள்ளது. – என்றார்.

## இளைஞனை இழுத்துச் சென்ற பாரிய பட்டத்தினால் பரபரப்பு

### புத்தூரில் நேற்றுப் பகல் சம்பவம்

தைப்பொங்கலை முன்னிட்டு யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி புத்தூர்ச் சந்திக்கு அண்மையில் பட்டம் ஏற்றிய இளைஞர் ஒருவரை 20 அடி உயரத்திற்கு பட்டம் இழுத்துசென்ற சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக இணையத் தளச் செய்திகள் தெரிவித்தன.

நேற்று 30 அடிப்பட்டத்தைச் சில இளைஞர்கள் கட்டி அதனை ஏற்றினர். இதன்போது பட்டம் எற்றியவரைப் பட்டம் 20 அடி உயரத்திற்கு இழுத்து சென்றது. அவர் பட்டத்தின் கயிற்றைக் கையைவிட்டமையால் கீழே விழுந்து காயமடைந்த நிலையில் தப்பியுள்ளார்.

இவரை மற்றைய இளைஞர்கள் தூக்கிசென்று யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்த்துள்ளனர் என்றும் கூறப்பட்டது.

## வயாவிளான் பகுதியில் பொலிஸ் வீதிச் சோதனை

அண்மையில் விடுவிக்கப்பட்ட குரும்பசிட்டி மற்றும் வயாவிளான் பகுதிகளில் இடம்பெறுவதாகக் கூறப்படும் மரக்கடத்தல் மற்றும் சுண்ணாம்புகல் அகழ்வுகளை கட்டுப்படுத்துவதற்காக பலாலி பொலிஸார் வீதிச் சோதனையில் ஈடுபட்டுள்ளமையை காணக்கூடியதாக உள்ளது.

இப்பகுதிகளில், இரவுநேரம் மற்றும் பகல் நேரங்களில் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். விடுவிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்கள் சிலர் வெளிநாடுகளில் வசித்து வருகின்றனர். இவ்வாறு உரிமையாளர்கள் இல்லாத காணிகளுக்குள் நுழையும் திருடர்கள், அங்குள்ள பெறுமதியான மரங்களை அகற்றுதல் மற்றும் சுண்ணாம்புக் கற்கள் அகழும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர். கடந்த 2 வருடங்களில், அச்சுவேலி தெல்லிப்பளை பொலிஸாரால் அதிகளவான சுண்ணாம்புகல் அகழ்வில் ஈடுபட்ட பலர் கைது செய்யப்பட்டு, அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கபபட்டிருந்தது.

## அரபு இராச்சியத்தில் வேலைபெற இனிப் பொலிஸ் சான்றிதழ் தேவை

அரபு இராச்சியத்தின் டுபாய், சாஜா மற்றும் அபுதாபி ஆகிய நகரங்களுக்கு வேலைவாய்ப்புக்காக செல்லும் இலங்கையர்கள் நாட்டின் பொலிஸ் நற்சான்றிதழ் ஒன்றைக் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும் என்ற சட்டமொன்றை அந்நாடு வெளியிட்டுள்ளது.

இச்சட்டம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருவதாகவும் ஐக்கிய அரபு இராஜ்ஜியம் அறிவித்துள்ளது.

இச்சட்டம் சுற்றுலாப் பயணிகளுக்கு விதிவிலக்கு எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமது நாட்டுக்குள் வருபவர்கள் தாய் நாட்டில் குற்றமற்றவர்களாக இருக்க வேண்டும் என்பதற்காகவே இச்சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

## தனது டுவிட்டரில் தமிழில் நாமல் பொங்கல் வாழ்த்து!

கொழும்பு, ஜன.15

உலகெங்கிலும் உள்ளஅனைத்துதமிழ் மக்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ பொங்கல்வாழ்த்துக்களை தனது உத்தியோகப்பூர்வ டுவிட்டர் தளம் மூலம் தமிழில் பதிவிட்டுள்ளார்.

“தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் பண்டிகைத் திருநாளில் இலங்கை மற்றும் உலகெங்கிலும் உள்ள அனைத்து உறவுகளுக்கும் என் அன்பான பொங்கல் நல் வாழ்த்துக்கள். இந்த பொங்கல் இலங்கை மக்களை சகோதர அன்பில் பிணைத்து, நம் நாட்டின் ஒற்றுமை மற்றும் முன்னேற்றத்திற்காக ஒன்றிணைய ஊக்குவிக்கட்டும்.” – என அவர் பதிவிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

# தீர்வுக்காக உழையுங்கள்!

தமது பொங்கல் செய்தியில், தமிழ் மக்களுக்கு கிட்ட வேண்டிய தீர்வு எத்தகையதாக அமைய வேண்டும் என்பது தொடர்பில் தமது எதிர்பார்ப்பை மீண்டும் ஒரு தடவை வெளியிட்டிருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.

நேற்றுப் பிறந்த தைத் திருநாளை ஒட்டி தாம் விடுத்த வாழ்த்துச் செய்தியிலேயே தமிழர்களுக்கு எத்தகைய தீர்வு வேண்டும் என்பதை, கடவுளுக்குச் செய்யும் பிரார்த்தனையாகக் குறிப்பிட்டு முன்வைத்திருக்கின்றார் அவர்.

அந்தத் தீர்வுக்கான சில அடிப்படைகளையும் அவர் மீளவும் அதிலும் கோடி காட்டியிருக்கின்றார்.

- அனைத்து மக்களினதும் இறையாண்மையை மதிக்கக் கூடிய -

- அனைத்து மக்களினதும் சுயநிர்ணய உரிமைகளை அங்கீகரிக்கத் தக்க -

- சுயாட்சியுடன் கூடிய -

- நின்று, நிலைத்து, நீடித்திருக்கக் கூடிய -

நிரந்தரத் தீர்வு பற்றியே அவர் அதிகம் பேசியிருக்கின்றார்.

இத்தகைய தீர்வைக் காண்பதன் மூலம் இதய சுத்தியுடனான புரிந்துணர்வையும், இன நல்லிணக்கத்தையும், ஒற்றுமையையும் ஏற்படுத்துவதற்கு வழி செய்யமுடியும் எனவும் அவர் அந்தச் செய்தியில் கோடி காட்டுகின்றார்.

தமிழ் மக்களின் இறையாண்மை பற்றி இதுவரை பேசிவந்த தமிழ்த் தலைவர் சம்பந்தன், இப்போது அனைத்து மக்களின் இறையாண்மை பற்றிக் குறிப்பிடுகின்றார்.

இது, தமிழர்களின் இறையாண்மை உரிமை குறித்து வலியுறுத்தும் அதேசமயம், இந்த நாட்டில் எண்ணிக்கையில் பெரும்பான்மையினரான சிங்கள மக்களின் இறையாண்மையையும் நாம் மதிக்கிறோம் என்று காட்டுவதன் மூலம், எமது உரிமைக் கோரிக்கையை நியாயப்படுத்தும் வகையில் முன்வைப்பதற்கான எத்தனமாக இருக்கலாம்.

தமிழர்கள் எதிர்பார்க்கும் இறையாண்மை என்பது இலங்கை மக்கள் அனைவருக்கும் பொதுவான இறையாண்மை அல்ல. தமிழ் மக்களுக்கே தனித்துவமாக இருக்கும் - பிறப்புரிமையின் அடிப்படையிலான - இறையாண்மையாகும்.

இந்தத் தீவில், தொன்மை வாய்ந்த இரு நாகரிகங்களுடன் வாழ்ந்து வருபவர்கள் தமிழர்களும், சிங்களவர்களும்.

வேறுபட்ட மொழிகள், பாரம்பரியங்கள், பண்பாடுகள், வேறுபட்ட நிலப்பரப்புகளைக் கொண்டு, வெவ்வேறான வரலாற்றுப் பின்னணிகளோடு வாழ்ந்து வரும் இரு வேறு தனித்துவமான தேசிய இனங்கள் அவை.

இந்தத் தீவில் வடக்கிலும் கிழக்கிலும் அமைந்த தமது பூர்வீகத் தாயகத்தில் தனித்துவமான இறையாண்மையைக் கொண்டவர்கள் தமிழர்கள்.

அது போலவே, சிங்களவர்களுக்கும் தனித்துவமான தேசமும், தேசியமும், இறையாண்மையும், தாயகமும் இந்த இலங்கைத் தீவில உள்ளன என்பதைத் தமிழர்களாகிய நாம் முழுமையாக ஏற்கிறோம்.

ஆனால், மக்கள் தொகை என்ற எண்ணிக்கைக் கணியத்தை வைத்துக் கொண்டு -

அல்லது இன்று தன்வசம் கொண்டிருக்கும் 'அரசு' என்ற கட்டமைப்பு ரீதியான பலத்தை வைத்துக் கொண்டு -

தனித்துவ இறையாண்மை கொண்ட தமிழனத்தை அடக்கி ஆள்வதோ, அல்லது தென்னிலங்கைச் சிங்களப் பேரினவாதத்தின் மேலாதிக்கம் காரணமாக சிங்கள இறையாண்மைக்குள் தமிழர் தேசத்தின் இறையாண்மையைக் கரைத்து, நசுக்கி, அடக்கி விடமுயல்வதோ ஏற்புடையதன்று.

அத்தகைய நோக்கிலான எந்தத் தீர்வும் நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடியதாகவோ, நிரந்தரத் தன்மையுடையதாகவோ அமைய முடியாது. அப்படி அமையாத தீர்வைத் தமிழர் தேசம் ஏற்றுக் கொள்ளவும் மாட்டாது.

இந்த இறையாண்மை, தாயகம், சுயாட்சி, உள்ளக சுயநிர்ணயம் போன்ற சொல்லாடல்களில் பொதிந்து நிற்கும் அர்த்தங்களை உள்ளடக்கியதாகவே 'சமஷ்டித் தீர்வு' குறித்துத் தமிழர்கள் பிரஸ்தாபித்தார்கள்; பிரஸ்தாபிக்கிறார்கள்.

வடக்கு, கிழக்கு இணைந்ததே தமிழர் தாயகம். அந்தத் தாயகத்துக்கான சமஷ்டித் தீர்வு மூலம் மேற்படி விடயங்களை நிறைவு செய்து கொள்ளமுடியும், நிறைவு செய்ய வேண்டும் என்று தமிழர்கள் நம்புகின்றனர்; எதிர்பார்க்கின்றனர்.

அதற்காகவே சம்பந்தன் தலைமையிலான தமிழ்க் கூட்டமைப்புக்குத் திரும்பத் திரும்ப அவர்கள் வாக்களித்து தங்கள் பிரதிநிதிகளாக உறுதிப்படுத்தினர்.

'சமஷ்டித் தீர்வு' என்பது 'சமஷ்டி' என்ற பெயருடன் வரவேண்டும் என்பதல்ல. பெயர் எப்படியும் இருந்து விட்டுப் போகட்டும்.

ஆனால், இப்போது சம்பந்தன் தமது தைப்பொங்கல் செய்தியில் குறிப்பிட்டமைபோல -

தமிழரின் இறையாண்மை, சுயநிர்ணய உரிமை, சுயாட்சி ஆகியவற்றைத் தமிழர் தாயகத்துக்கு வழங்குவதாக அது இருக்க வேண்டும்.

அதற்காக நெஞ்சுக்கு நீதியுடன் உழையுங்கள் தமிழர் தலைவர்களே...!

# தமிழீழ எழுச்சிப் பாடல்களை சு.கவினர் பயன்படுத்துவதா?

## சீறுகின்றார் வடக்கு அவைத்தலைவர்



யாழ்ப்பாணம், ஜன.15

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் எந்தவொரு தொடர்பையும் கொண்டிராதவர்கள் இன்று அந்த அமைப்பின் வாரிசுகள் என்று சொந்தம் கொண்டாட முனைகின்றனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் தமிழீழ எழுச்சிப் பாடல்களை ஒலிக்கவிட்டு தமது தேர்தல் பரப்புரையை முன்னெடுத்தமையை வன்மையாகக் கண்டிக்கின்றேன்

- இவ்வாறு வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சி, யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய தேர்தல் அறிக்கை வெளியீட்டு நிகழ்வில், தமிழீழ விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழீழ எழுச்சிப் பாடல்களை ஒலிபெருக்கியது. இது தமிழ், சிங்கள ஊடகங்களில் முக்கிய செய்தியாக வெளியாகியிருந்தது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இந்தச் செயற்பாடு குறித்துச் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஒவ்வொருவருக்கும் தமது கருத்துக்களை வெளியிடுவதற்கு சுதந்திரமுண்டு. ஆனால், சுதந்திரக் கட்சியினருடைய இந்தச் செயற்பாடு அத்துமீறியதாக உள்ளது. மக்கள் இதனைப் புரிந்து கொள்வார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் அவர்களுக்கு எதிராகச் செயற்பட்டவர்கள் இன்று அந்த அமைப்பின் பெயரைச் சொல்லி அரசியல் நடத்துவது தவறு.

ஆட்சி அதிகாரத்திலுள்ளவர்களின் இந்தச் செயற்பாடு அண்ணாந்து பார்த்துத் துப்புவதற்குச் சமமானதாகும்.

கொள்கை வங்குரோத்து நடவடிக்கையே இது.

தமிழ் மக்களை ஏமாற்ற முடியாது. எமது மக்களுக்கு அரசியல் தெளிவில்லை எனச்சிலர் நினைக்கலாம். ஆனால் அன்னப்பறவை கள்போல் அனைத்தையுமே பகுத்தறியும் சக்தி எமது மக்களுக்கு உண்டு. - என்றார் அவர்.

# மற்றொரு யானையின் சடலம் கல்லடிப் பகுதியில் நேற்று மீட்பு

மின்சாரம் தாக்கி உயிரிழந்தாக கருதப்படும் யானை ஒன்றின் உடலம் நேற்று அதிகாலை கல்லடிப் பிரதேசத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.



காட்டு யானைகளிடம் பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டு தமது வீட்டை சுற்றித்தாம் மின்சார வேலிஇட்டு வைத்திருந்ததாக, உடலம் மீட்கப்பட்ட காணியின் உரிமையாளர் காவல்துறையினரிடம் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், இந்த யானை உயிரிழந்தமைக்கான சரியான காரணம் இதுவரையில் கண்டறியப்படாத நிலையில், பிரேத பரிசோதனை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வாரங்களுக்குள் கல்லடி வனப் பகுதியை அண்மித்த பிரதேசத்தில் மீட்கப்படும் இரண்டாவது யானையின் உடலம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது

# பொங்கலன்று விவசாயி யானை தாக்கி மரணம்

## மட்டு. கிரான் பகுதியில் சம்பவம்

கிரான் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கற்கிளாச்சோலை பகுதியில் காட்டு யானை தாக்கி விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளாரர் என வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் இடம்பெற்றுள்ள இச்சம்பவத்தில் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சித்தாண்டி பிரதான வீதியை அண்டி வாழும் தம்பிமுத்து கந்தசாமி (வயது-57) என்ற விவசாயியே உயிரிழந்துள்ளார்.

இவர் தைப்பொங்கல் தினமான நேற்று ஞாயிற்றுக்கிழமை வயல் பகுதியூடாக வரும்போது குறிக்கிட்ட காட்டுயானை, இவரைத் தாக்கியதில் அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

# மட்டு. வந்தாறுமூலையில் மரக்கடத்தல் முறியடிப்பு!

## கடத்தல்காரர்கள் தப்பியோட்டம்



மட்டக்களப்பு-வந்தாறுமூலை பிரதேசத்தில் சட்டவிரோதமாக வெட்டப்பட்ட ஒரு தொகுதி தேக்கு மரக்குற்றிகளை ஏறாவூர்ப் பொலிஸார் நேற்று அதிகாலை கைப்பற்றியுள்ளனர்.

மரக்கடத்தலில் ஈடுபட்டவர்கள் பொலிஸாரைக் கண்டதும் மரக்குற்றிகளையும் துவிச்சக்கர வண்டிகளையும் கைவிட்டு விட்டுத்தப்பியோடியுள்ளனர் என ஏறாவூர் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

6 மற்றும் 11 அடி நீளமாக அறுக்கப்பட்ட 40 தேக்கு மரக்குற்றிகளும் இரண்டு துவிச்சக்கர வண்டிகளும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

வந்தாறுமூலை - உப்போடை வயற்பிரதேச வீதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஏறாவூர் பொலிஸாரே இந்த மரக்கடத்தலை முறியடித்துள்ளனர்.

சந்தேக நபர்களைத் தேடும் நடவடிக்கை தொடர்ந்தும் நடைபெறுவதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# இலங்கைக்கு இரண்டாம் கட்ட கொடுப்பனவு

அம்பாந்தோட்டை துறைமுக முதலீட்டின் இரண்டாவது கட்ட நிதியை சீனா இலங்கைக்கு வழங்கியுள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுக முதலீட்டின் இரண்டாவது கட்ட நிதியான 97.3 மில்லியன் அமெரிக்க டொலரையே (சுமார் ஆயிரத்து 460 கோடி ரூபாவையே) சீனா இலங்கைக்கு வழங்கியுள்ளது.

சீனமேர்ச்சன்ட் போர்ட் ஹோல்டிங்ஸ் வழங்கிய இந்த நிதித் தொகை ஏற்கனவே துறைமுக அதிகார சபையிடம் கையளிப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாளை

16.01.2018
செவ்வாய்க்கிழமை
நட்சத்திரம் : பூராடம் மு.இ. 8.22 வரை
திதி : அமாவாசை முழுவதும்
சுபநேரம் : 11.04 – 12.34 வரை
இராகுகாலம்: 03.34 – 05.04 வரை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கான ஆயுத விற்பனையை நிறுத்துக; பிரித்தானிய எம்.பிக்களிடம் கோரிக்கை

## புலம்பெயர் தமிழர்கள் கூட்டாக விடுத்தனர்



கொழும்பு,ஜன.16

இலங்கைக்கான ஆயுத விற்பனையை நிறுத்தக்கோரி, பிரித்தானியத் தமிழர் தகவல் நடுவத்தின் ஏற்பாட்டில் புலம் பெயர் தமிழர்கள் இணைந்து பிரித்தானியாவின் நாடாளு மன்ற உறுப்பினர்களிடம் நேற்று முன்தினம் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர்.

இலங்கையில் இறுதி யுத் தத்தின்போது நிகழ்ந்த பெரும் தமிழ் இனப் படுகொலைக்கு எதிரானபோர்க்குற்ற விசார ணைகள் சர்வதேச ரீதியில் முடக்கி விடப்பட்டுள்ளநிலை யில் இன்றும் ஈழத்தமிழர்கள் பல இரகசிய முகாம்களில் சித் திரவதைக்கு உட்ப டுத்தப்பட் டும், அழிக்கப்பட்டும் வருகின் றனர் எனத் தெரிவித்துள்ளனர்.

இலங்கை அரசின் இந்த கண்மூடித்தனமான செயற் பாடுகளுக்கு பிரித்தானியா போன்ற சர்வதேசநாடுகள் ஆயுதங்களை வழங்கி ஊக்கு விக்கின்றன என அவர்கள் குற் றம் சுமத்தியுள்ளனர்.

இந்நிலையில், பிரித்தா னியா இலங்கைக்கு ஆயுதங் களை விற்பனை செய்வதை நிறுத்தக்கோரி பிரித்தானியத் தமிழர் தகவல் நடுவத்தின் ஏற்பாட்டில் புலம்பெயர் தமி ழர்கள் இணைந்து அந்நாட் டின் நாடாளுமன்ற உறுப் பினர்களைத் தொடர்ச்சியாக சந்தித்து வலியுறுத்தி வருகின் றனர்.

அதனடிப்படையில், நேற்று முன்தினம் லெட்சுமன் தெய் வேந்திரம் தலைமையில் சிவ ராஜா சிவசுதன், குகேந்திரன் பத்மலோஜினி, ஜதுனா சதா னந்தன், சுரேஸ் குணரத்னம் ஆகிய புலம்பெயர் தமிழர்கள் டாட் போட் தொகுதி ஆளுங் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கரேத் ஜோன்சனை சந்தித்து இந்தக் கோரிக்கையை முன் வைத்துள்ளனர்.

மனித நேயத்திற்கு மதிப்ப ளிக்கும் பிரித்தானியா, இலங் கைக்குஆயுதங்களை,தொடர்ந்து விற்பனைசெய்வது ஏற்புடைய தல்ல என அவர்கள் சுட்டிக்காட் டியதுடன் உடனடியாக இந்த ஆயுத விற்பனையை நிறுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

இதேசமயம், ஆயுத விற்ப னையை நிறுத்துதல் தொடர் பில் பிரித்தானிய நாடாளு மன்றத்தில் விவாதிக்கும்படி யும் கேட்டுக்கொண்டனர்.

இவ்விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த பிரித்தா னிய நாடாளுமன்ற உறுப்பினர் கரேத் ஜோன்சன், அப்பாவி மக்களை அழிக்கும் செயற்பா டுகளுக்கு பிரித்தானியா ஒருபோதும் துணை போகாது எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், பிரித்தானிய பாது காப்புச் செயலருக்கு இந்த விடயம் தொடர்பாகத் தெரிவிப் பதாகவும், தம்மை சந்தித்தது போன்று ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்து ஆயுத விற்பனையை நிறுத்த ஆதரவு கோருமாறும் புலம்பெயர் தமிழர்களுக்கு அவர் ஆலோ சனை வழங்கியுள்ளார். (இ)



# புதுடில்லியில் நேற்றுமுன்தினம் மங்கள – சுஷ்மா பேச்சு

சிறிலங்காவின் நிதி அமைச்சர் மங்கள சமர வீரவுக்கும், இந்திய வெளி விவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜுக் கும் இடையில் புதுடில்லியில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் நடந்த இந்தச் சந்திப்பின் போது, அபிவிருத்தி ஒத்துழைப்பு தொடர்பான இருதரப்பு விவகாரங்கள் குறித்து, இரண்டு தலைவர்களும் பேச்சுக்களை நடத்தினர் என்று இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ரவீஷ் குமார் தெரிவித்துள்ளார்.

# கடல் பிரதேசங்களில் காற்றுடன் கூடிய மழை

கொழும்பு, ஜன 15

காங்கேசன்துறையில் இருந்து திருகோண மலை ஊடாக மட்டக்களப்பு வரையான ஆழ்கடல் மற்றும் ஆழமற்ற கடல் பிரதேசங் களில் காற்றுடன் கூடிய மழை பெய்யும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

சில பிரதேசங்களில் காற்றின் வேகம் மணித்தியாலத்திற்கு 80 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கும்.

இதனால் கடல் பிரதேசம் கொந்தளிப்புடன் காணப்படும். கடற் றொழில் நடவடிக்கையில் ஈடுபடுவோரை அவதானத்துடன் செயற்ப டுமாறு திணைக்களம் கேட்டுள்ளது.

(ஐ)

## கட்டுநாயக்காவில் தடுத்து வைக்கப்பட்ட

# நாடு கடந்த தமிழீழ அரசின் உறுப்பினர் குடும்பத்துடன் நாடு கடத்தப்பட்டார்



கொழும்பு,ஜன.15

நாடுகடந்த தமிழீழ அரசாங் கத்தின் மூத்த உறுப்பினரான சுரேஸ்நாத் இரத்தினபாலனும் அவரது குடும்பத்தினரும், இலங் கையில் இருந்து நாடு கடத்தப்பட் டுள்ளனர்.

கறுப்புப் பட்டியலில் இடம் பெற்றிருந்ததால் இலங்கைக் குள் நுழைய அனுமதிக்கப்படா மல் கட்டுநாயக்க விமான நிலை யத்தில் தடுத்து வைக் கப்பட்டி ருந்த சுரேஸ்நாத் இரத்தினபால னும் அவரது குடும்பத்தினரும் நேற்றுமுன்தினம் காலை நாடு கடத்தப்பட்டனர் என்றும் அதிகாரி கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை பிற் பகல் அபுதாபியில் இருந்து எதி ஹாட்விமானமூலம், கட்டுநாயக்க விமானநிலையத்தைவந்தடைந்த சுரேஸ்நாத் இரத்தினபாலனும் அவரது குடும்பத்தினரும், நேற்று முன்தினம் காலை சிறிலங்கன் விமானசேவை மூலம், பாங்கொக் கிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கனடாவின் ரொரன்டோ நகரில் இருந்து நாடு கடந்த அர சாங்கத்தின் அரசவை உறுப்பின ராகத் தெரிவு செய்யப்பட்ட சுரேஸ் நாத் இரத்தினபாலன், இலங்கை அரசுக்கு எதிரான தீவிரமான கருத்துக்களை வெளியிட்டு வந் தவர் என்று கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.இவரை இலங்கைக்குள் நுழைய குடிவரவு அதிகாரிகள் அனுமதி மறுத்தி ருந்த நிலையில், பாங்கொக்கிற்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

இவர்களைத் திருப்பி அனுப் பும் உத்தரவை ரத்துச்செய்வதற்கு இலங்கை அமைச்சர்கள் சிலர் முயற்சிசெய்தனர்எனவும், ஆனால் குடிவரவுத் திணைக்கள அதிகாரி களின் இறுக்கமான போக்கால் அது சாத்தியமாகவில்லை என் றும் கூறப்படுகிறது.

நாடுகடத்தும் உத்தரவை ரத்துச் செய்யுமாறு கோரிக்கை விடுத்த அமைச்சர்களிடம், அதனை எழுத்து மூலம் தருமாறு குடிவரவுத் திணைக்களம், கோரியது எனவும் அவர்கள் அதற்கு இணங்காத நிலையில், சுரேஸ்நாத் இரத்தின பாலனும் அவரது குடும்பத்தி னரும் நாடு கடத்தப்பட்டனர் எனவும் கூறப்படுகிறது.

எனினும், சுரேஸ்நாத் இரத்தின பாலனும் அவரது குடும்பத்தின ரும் இலங்கையில் தடுத்து வைக் கப்பட்டி ருந்த காலப்பகுதியில் விமான நிலை யத்துக்குள் உள்ள நட்சத்திர விடுதி ஒன்றிலேயே முக்கிய பிரமுகர்களுக்குரிய வச திகளுடன் தங்க வைக்கப்பட் டிருந்தனர் எனவும், நாடு கடத்தப் படும் ஏனையவர்களைப் போன்று நடத்தப்படவில்லை என்றும் கொழும்பு ஊடகம் செய்தி வெளி யிட்டுள்ளது.

(இ)

# மிஹின் லங்கா மோசடிகளை விசாரிக்க விசேட ஆணைக்குழு

கொழும்பு, ஜன 15

கடந்த அரசில் மிஹின் லங்கா நிறுவனத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடி நடவடிக்கைகளைக் கண்டறிவதற்கு இன்னும் இரு வாரங்களுக்குள் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஒன்றை அமைக்கவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித் துள்ளார்.

திஸ்ஸமஹாராம தெபரவெவ பிரதேசத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற பொதுக் கூட் டத்தில் கலந்துகொண்டு உரையாற்று கை யிலேயே அவர் இதனைக் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பைத் தவிர தமிழ் மக்களிடம் வாக்குகள் கேட்கும் உரிமை வேறு எந்தக் கட்சிக்கும் இல்லை!

மட்டக்களப்பு,ஜன.15

கூட்டமைப்பைத் தவிர தமிழ் மக்களிடம் வாக்கு கேட்கும் உரிமை வேறு எவருக்கும் இல்லையென மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்துள்ளார்.




சிறிநேசன் தெரிவிப்பு

தமிழர்களைக் கடத்திக் கொலைசெய்த, கப்பம்பெற்ற, காட்டிக்கொடுத்து விடுதலை போராட்டத்தை இல்லாமல் செய்தவர்கள் இன்று தமிழர்களிடம் வாக்கு கேட்டுவருகின்றனர் அவர்களை மக்கள் நிராகரிக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப்பற்று பிரதேசபைக்கான தேர்தலில் போட்டியிடும் யோ.ரஜனி மற்றும் கயசீலன் ஆகியோரின் தேர்தல் செயற்பாட்டுஅலுவலகம்பாலையடிவட்டை கூழாவடியில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை திறந்து வைக்கப்பட்டது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

தொடர்ந்தும் பேசுகையில்,

உலகமே வியந்த விலைபோகாத போராட்டமாகவிருந்த, மிகவும் கட்டுப்பாட்டுடன் இருந்த விடுதலைப் போராட்டத்தைப் பலவீனப்படுத்தியவர்கள் யார்? இப்படிப்பட்டவர்கள் எப்படி வந்து உங்களிடம் வாக்குகளைக் கேட்கமுடியும்.

அநியாயங்களை, அக்கிரமங்களை செய்தவர்கள், பெண்களின் தன்மானத்தோடு விளையாடியவர்கள், கொடுமைகளைச் செய்தவர்கள் கூட தமிழ் மக்களிடம் வாக்கு கேட்டு வருகின்றனர்.

இவ்வறான வரலாற்றுத் தவறுகள் செய்தவர்களை மதிப்பதற்கு எந்தக் காரணமும் இருக்கமுடியாது. அவர்கள் வரும்போது அவர்களை வரவேற்காமல் அவர்களுக்கு வாக்களிக்காமல் நிராகரிக்க வேண்டும்.

முன்னைய பிரதேசசபை தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடாத காரணத்தால் வேறு சில போட்டியிட்டவர்கள் ஆட்சி செய்தனர்.எங்களது தலைவர்களைச் சுட்டுக்கொன்றும், கொலை அச்சுறுத்தல்களை கொடுத்தும் தேர்தலில் போட்டியிடமுடியாத வகையில் வீட்டுக்கட்சியினர் வீட்டுக்குள் முடக்கப்பட்டனர்.

இந்த நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் வீட்டுக் கட்சியை தவிர வாக்கு கேட்பதற்கு வேறு யாருக்கும் உரிமை இல்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ப)

## தளபாடங்கள் பற்றாக்குறையால் மாணவர்கள் பெரும் அசௌகரியம்

திருகோணமலை,ஜன.15

திருகோணமலை, கந்தளாய் அல் தாரீக் கனிஷ்ட வித்தியாலயத்தில் தளபாடங்கள் பற்றாக்குறை காரணமாக மாணவர்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனப் பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்த பாடசாலையில் 200 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வரும் நிலையில்அரைவாசி மாணவர்கள் தளபாடங்கள் இன்றி நிலத்தில் இருந்து கல்வி கற்று வருகின்றனர் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனால், பாடசாலை விட்டு வீட்டுக்குப் பிள்ளைகள் வரும் போது ஆடைகள் அழுக்கடைந்த நிலையில் காணப்படுகின்றன எனவும் பெற்றோர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாகப் பெற்றோர்கள் பாடசாலையின் அதிபர் ஊடாகக் கந்தளாய் வலய கல்விப் பணிப்பாளர் மற்றும் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கும் எழுத்து மூலம் அறிவித்தும் எந்த விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

எனவே, இந்த விடயத்தில் கல்வி உயர் அதிகாரிகள் விரைவில் கூடிய கவனம் செலுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப)




## மது பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு ஊர்வலம்

திருகோணமலை,ஜன.15

திருகோணமலை - முத்துநகர் முஸ்லிம் பேண்தகு வித்தியாலயத்தில் மதுபாவனைக்கு எதிரான விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த ஊர்வலம் மதுபோதை ஒழிப்புக் குழுவினரால் நேற்று முன்தினம் நடத்தப்பட்டது.

திருகோணமலை வலயக்கல்வி அலுவலக தம்பலகாமக் கோட்டக் கல்வி பணிப்பாளர் இராஜசுரேஷ் பங்களிப்புடன் இந்த ஊர்வலம் இடம் பெற்றது.

இந்த ஊர்வலத்தில் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திக் குழுவினர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ப)

## கல்லடி பகுதியில் வீடு உடைத்து நகை, பணம் அபேல்



மட்டக்களப்பு கல்லடிப் பகுதி வீடு ஒன்றில் இருந்து பெறுமதியான தங்க நகைகள் மற்றும் பணம் திருடப்பட்டுள்ளன என காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லடி - கல்முனை பிரதான வீதியின் கல்லடி நொச்சிமுனை பகுதி வீடு ஒன்றில் இருந்து நேற்று முன்தினம் மாலை வீட்டின் பின்புற கதவை உடைத்து பெறுமதியான தங்க நகைகள் மற்றும் பணம் என்பன திருடப்படடுள்ளன என மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது ஏழரை இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளும் மூன்றரை இலட்சம் ரூபா பணம் என்பனவும் திருடப்பட்டுள் ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இளைஞனின் சாவை அடுத்து

## புறக்கோட்டை பொலிஸ் அதிகாரி மட்டக்களப்புக்கு உடன் இடமாற்றம்

கொழும்பு - புறக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி (ஓ.ஐ.சீ.) உடன் அமுலுக்கு வரும்வகையில் மட்டக்களப்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

புறக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் 17 வயது இளைஞன் தற்கொலை செய்துகொண்ட சம்பவத்தை அடுத்தே அவருக்கு இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

புறக்கோட்டை பொலிஸ் நிலைய சிறைக் கூடத்தில், ஹப்புத்தளையைச் சேர்ந்த 17 வயது இளைஞன் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

அந்த இளைஞன் கஞ்சா போதைப் பொருளை உடன் வைத்திருந்த குற்றச்சாட்டில் கொழும்பு, பெஸ்டியன் மாவத்தையில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். பின்னர், விசாரணைக்காக புறக்கோட்டை பொலிஸ் நிலைய கூண்டில் அடைக்கப்பட்டிருந்த நிலையிலேயே அவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இந்த நிலையில் உடன் அமுலுக்கு வரும் வகையில் புறக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## காரைதீவுப் பிரதேச சபையை சுயேச்சைக்குழு கைப்பற்றும்

ஆரூடம் கூறுகிறார் வேட்பாளர் குமாரசிறி

எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் காரைதீவு பிரதேசசபையின் அதிகாரத்தை ஊர்த் தீர்மானத்தை ஏற்று களமிறங்கிய சுயேச்சைக்குழு கைப்பற்றும். இதில் எவ்வித சந்தேகமுமில்லை. இதன்மூலம் காரைதீவு மண்ணின் ஒற்றுமையை உலகிற்குப் பறைசாற்றுவோம்.

இவ்வாறு காரைதீவு பிரதேசசபைக்கு சுயேச்சைக்குழு-01 இன் சார்பில் 7ஆம் வட்டாரத்தில் போட்டியிடும் வேட்பாளர் கே.குமாரசிறி ஆரூடம் தெரிவித்தார்.

அவர் அவரது வட்டார மக்களைச்சந்தித்து கலந்துரையாடியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு :- காரைதீவு மண்ணின் இறைமையைக் கருத்தில் கொண்டு எமது மண்ணை நாங்களே ஆளவேண்டும் எனும் நோக்கோடும் இம்மண்ணைச் சிறந்த முறையில் அபிவிருத்தி மூலம் கட்டியெழுப்ப வேண்டுமென்பதற்காகவும் அத்தனை கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரு குடை யின் கீழ் சுயேச்சையாகப் போட்டியிட இம்மண்ணின் அரசியல் முக்கியஸ்தர்கள் ஆதரவுவழங்கினார்கள்.

ஆனால், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அரசியல் அதிகாரத்திற்காகவும் தங்களின் இருப்பிற்காகவும் எமது மண்ணின் தீர்மானத்திற்கு எதிராக தேர்தலில் போட்டியிடுகின்றனர். ஒற்றுமையைக் குழப்பியவர்களும் அவர்களே.

தமிழன் ஆண்ட கிழக்கு மாகாண சபையை அரசியல் பலமிருந்தும் மாற்றுச் சமூகத்திற்கு தாரைவார்த்ததைப் போன்று காரைதீவு பிரதேசசபையில் போட்டியிடுவதன் மூலம்வாக்குகளைச் சிதறடித்து மாற்றானுக்கு ஆட்சியைக் கொடுப்பதற்கு முயற்சிக்கின்றனர். இவர்களின் இவ்வாறான செயற்பாடுகளை ஏற்றுக்கொள்வதற்கு விபுலமண்ணின் கல்விச்சமூகம் அவ்வளவு முட்டாள்களல்ல என்று தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ள ஜாலிய விக்ரமசூரியவின் அறிக்கை



நீதிமன்றில் ஆஜராக முடியாத இக்கட்டாம்

கொழும்பு,ஜன.15

இலங்கையில் நடந்தன எனக் கூறப்படும் போர்க் குற்றங்களைப் பற்றிய தகவல்களைத் தெரிவித்தால், தனக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக அமெரிக்க அதிகாரிகள் கூறினர் எனவும், எனினும் தான் அதை கடுமையாக நிராகரித்தார் எனவும் அமெரிக்காவுக்கான முன்னாள் இலங்கை தூதுவர் ஜாலிய விக்ரமசூரிய தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள அமெரிக்காவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்ரமசூரிய, நீதிமன்றத்தில் ஆஜராக முடியாமைக்கான காரணங்களை தெளிவுபடுத்தி ஊடகங்களுக்கான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

ஜாலிய விக்ரமசூரியவை உடனடியாகக் கைது செய்வதற்கான பிடியாணை கொழும்பு கோட்டை நீதிவான் நீதி மன்றத்தால் கடந்த 5 ஆம் திகதி பிறப்பிக்கப்பட்டிருந்தது.

2017 ஆம் ஆண்டு ஜூலை மாதம், தனது கண் சிகிச்சைக்காக வெளிநாடு செல்ல நீதிமன்றத்தில் அனுமதி வேண்டியிருந்த ஜாலிய விக்ரமசூரியவுக்கு, 08 வாரங்களுக்கு உலகில் எந்த நாட்டுக்கும் சிகிச்சைக்காகச் செல்ல நீதிமன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் அவர் சிகிச்சைக்காக அமெரிக்கா நோக்கி பயணம் செய்தார். எவ்வாறாயினும் நிபந்தனையின் படி உரிய தினத்தில் மீண்டும் அவர் நீதிமன்றத்தில் ஆஜராகாதமையின் காரணமாக, கடந்த 2017 நவம்பர் மாதம் 17 ஆம் திகதி அவருக்கு எதிராகப் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அத்துடன், மீண்டும் ஜனவரி 05 ஆம் திகதி அவரைக் கைது செய்வதற்காக திறந்த பிடியாணை பிறப்பிக் கப்பட்டது.

இந்த நிலையில், தன்னால் நீதி மன்றத்தில் ஆஜராக முடியாது போனமைக்கான காரணங்களை விளக்கி அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு-

அமெரிக்காவில் சிகிச்சை பெற்ற அவர், மேலதிக சிகிச்சைக்காக வேறு ஒரு நாட்டுக்கு பயணிக்க அமெரிக்கா விமான நிலையத்திற்கு வந்த போது, அமெரிக்கா விமான நிலைய அதிகாரிகளால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளார். அத்துடன், அமெரிக்காவில் இருந்து வெளியேற முடியாதெனவும் அவ்வாறு வெளியேற முற்படுவாரானால் கைது செய்ய நேரிடும் எனவும் அமெரிக்க விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தன்மீது விசாரணை நடைபெறுவதால் தன்னை அமெரிக்காவை விட்டு வெளியேற அனுதிக்க வேண்டாம் என இலங்கை வெளிவிவகார அமைச்சு அமெரிக்கா அரசிடம் முன்வைத்த கோரிக்கையே இதற்குக் காரணம் என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர் என ஜாலிய விக்ரமசூரிய வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

நீதிமன்றத்தில் ஆஜராகாவிட்டால் தன்னைக் கைது செய்ய உத்தரவிட்டுள்ள அதே வேளை, அமெரிக்காவில் இருந்து வெளியேற முற்பட்டால் கைது செய்ய இலங்கை அரசு அனுமதித்துள்ள நிலையில் தன்னால் நீதிமன்றத்தில் ஆஜராக முடியாதுள்ளது என்று அவர் தனது அறிக்கை யில் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும், இலங்கையில் நடந்தனவாகக் கூறப்படும் போர்க் குற்றங்களைப் பற்றிய தகவல்களை தெரிவித்தால், தனக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக அமெரிக்க அதிகாரிகள் கூறினார் எனவும், எனினும் தான் அதை கடுமையாக நிராகரித்து விட்டனர் என்றும் ஜாலிய விக்ரமசூரிய வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார். (இ)

## திவுலப்பிட்டியவில் பலத்த காற்று: 600 வீடுகளுக்கு மேல் கடும் சேதம்



கொழும்பு,ஜன.15

திவுலப்பிட்டியில் கடந்த வெள்ளிக்கிழமை வீசிய பலத்த காற்றுக் காரணமாக 600இற்கும் மேற் பட்ட வீடுகள் சேதமடைந் துள்ளன என இடர்முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த இடரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன என கம்பஹா மாவட்டத்தின் இடர்முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் அஜித் நிஷாந்த தெரிவித்தார்.

இதேவேளை, பலத்த காற்று காரணமாக சில பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டுள்ளதாக மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

மின்விநியோகத்தைக் வழமைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலக்ஷன ஜயவர்தன குறிப்பிட்டார். (ஐ)

## மஞ்சள் கடவையில் வயோதிபர் அம்பிபுலன்ஸ் மோதியதில் பலி!

### மட்டக்களப்பில் பரிதாபம்



மஞ்சள் கடவையைக் கடக்க முற்பட்டவர் அம்புலன்ஸ் மோதிப் பலியான சம்பவம் ஒன்று மட்டக்களப்பில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை நோக்கிச் சென்றுகொண்டிருந்த அம்புலன்ஸிலேயே பாதசாரி ஒருவர் சிக்குண்டு உயிரிழந்தார்.

மட்டக்களப்பு - கொம்மாதுறை பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில், செங்கலடி, கொம்மாதுறையைச் சேர்ந்த சிவப்பிரகாசம் (வயது-63) என்பவரே பலியானவராவர்.

சந்திவெளி வைத்தியசாலையிருந்து நோயாளர் ஒருவரை, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற அம்புலன்ஸே கொம்மாதுறை பிரதான வீதியிலுள்ள மஞ்சள் கடவையை கடக்க முயன்ற நபருடன் மோதியது. இதில் அந்த நபர் சம்பவ இடத்திலேயே பலியானார்.

இவ் விபத்து தொடர்பில் ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (உ)

## ஆலய உற்சவம்

கோண்டாவில்,ஜன.15

கோண்டாவில் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய மணவாளக் கோல அஷ்டோத்திர சதா சங்காபிஷேகம் எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 7 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி தொடர்ந்து பிற்பகல் 3 மணிக்கு அம்பாளுக்கு திருவூஞ்சல் இடம்பெற்று வீதியுலா வரும் நிகழ்வும் இடம் பெறவுள்ளது. (இ)

## பஸ் மோதி சிறுமி சாவு

அவிசாவளை கண்டி வீதியில், பிந்தெனிய பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம் பெற்ற விபத்தில் சிறுமி உயிரிழந்துள்ளதுடன், இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

வீதியோரமாகச் சென்று கொண்டிருந்த பெண் ஒரு வர் மற்றும் இரண்டு சிறுமி கள் மீது தனியார் பஸ் ஒன்று மோதியதாலேயே இந்த விபத்து இடம் பெற்றது.




இந்த விபத்தில் ஏழு வயதுச் சிறுமி அந்த இடத்திலேயே உயிரிழந்தார். ஏனைய இருவரும் படுகாயமடைந்த நிலையில் கேகாலை போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அந்த பஸ்ஸின் சாரதியைப் பொலிஸார் கைது செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## வேட்பாளர் மீது தாக்குதல் வவுனியாவில் இருவர் கைது

வவுனியா,ஜன.15

வவுனியா நெளுக்குளம் தமிழ் தெற்கு பிரதேச சபை தேர்தலில் போட்டியிடும் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனயின் நெளுக்குளம் வேட்பாளர் மீது நேற்றுமுன்தினம் இரவு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இந்தச் சம் பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ் விடயம் தொடர்பாக மேலும் தெரியவருபவை வருமாறு:-

நேற்றுமுன்தினம் இரவு வவுனியா, நெளுக்குளம் பகுதியில் சிறு விபத்து ஒன்று இடம்பெற்றது. அந்த விபத்தில் சிறுவனொருவன் சிறு காயத்திற்குள்ளாகியிருந்தான். அவனுடன் கதைத்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனயின் நெளுக்குளம் வேட்பாளரான குகராசா மயூரன் என்பவர் மீது இருவர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற நெளுக்குளம் பொலிஸார் இருவரைக் கைது செய்தனர். காயமடைந்தவர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

என்ன காரணத்துக்காக இந்தத் தாக்குதல் இடம்பெற்றது என்பது குறித்து நெளுக்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (உ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பு நகர் எங்கும் கூட்டமைப்பின் சுவரொட்டிகள்

## ஏனைய கட்சியினரும் மக்களும் தெரிவிப்பு

முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சித் தேர்தலில் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கான தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் ஒருவரின் பிரசார சுவரொட்டிகள் நகர் எங்கும் ஒட்டப்பட்டுள்ளன என்றும் ஆனால், அவற்றை பொலிஸார் கண்டும் காணாதமை போல் நடந்து கொள்கின்றனர் என்றும் பலரும் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டால் அவர்களை கைது செய்யவும் ஒட்ட விடாது தடுக்கவும் மீறி ஒட்டினால் அதனை அகற்றவும் விசேடமாக பொலிஸார் கடமையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இருப்பினும் ஒட்டுசுட்டான் நகர்ப் பகுதியில் பல இடங்களிலும் குறிப்பாக பாடசாலை நுழைவாயில், வைத்திய சாலை நுழைவாயில், பஸ் தரிப்பிடம் வீதியோரம் உள்ள பாலங்கள் என எண்ணற்ற சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்திலிருந்து 100 மீற்றருக்கும் 1000 மீற்றருக்கும் இடைப்பட்ட பகுதியில் இவை ஒட்டப்பட்டும் இந்தச் செய்தி வெளியாகும் வரை அவை அகற்றப்படவில்லை இதற்கு அருகில் பொலிஸார் வீதி சோதனையில் ஈடுபட்டும் அவை அகற்றப் படவில்லை

செல்வாக்கின் அடிப்படையிலா அவை அகற்றப்படவில்லை என மக்களும் ஏனைய கட்சி வேட்பாளர்களும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

(இ-81)

# தினசரி ராசி பலன்

(15.01.2018)

*2017ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் தைத்திங்கள் 2 ஆம் நாள் திங்கட்கிழமை சதுர்த்தசிதிதி பி.இ 05.11 மணிவரை பின்னர் அமாவாசை நட்சத்திரம்:மூலம் மாலை04.19 மணிவரை பின்னர் பூராடம் சித்தயோகம் மாலை 4.19 வரை பின்னர் அசுபயோகம்.*

**ராகுகாலம்** *-காலை7.59மணி முதல் 09.25மணி வரை*

**சுபநேரம்** *-பகல் 12.36மணி முதல் 2.06மணி வரை*

**திவசம் செய்ய வேண்டிய திதி**-*தைமாத தேய்பிறை சதுர்த்தசி*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *மூலம்.*

**‘ஜோதிடமணி’ பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** யோகமான நாள். தனலாபம் அதிகரிக்கும். முதலீடுகள் பெருகும். உத்தியோக உயர்வு, நன் மாற்றம் கிட்டும். குடும்பத்தில் ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும்.

**ரிஷபம்** கவலையான நாள். வருமானம் குறையும். குடும்பத்தில் வீண் பிரச்சினைகள் உண்டாகும். நண்பர்களால் தொல்லைகள் உண்டாகும். தொழிலில் கடுமையாக உழைக்க வேண்டிவரும்.

**மிதுனம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். செலவுகள் அளவுக்கதிகமாகும். குடும்ப உறவு பேணப்படும். தேகாரோக்கியம் பாதிப்படையும். மருத்துவச் செலவுகள் உண்டாகும்.

**கடகம்** ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்ப உறவு பலப்படும். பெண்களுக்கு தாய் வீட்டு உதவியும் ஒத்தாசையும் கிட்டும். வியாபாரம் நன்கு செழிப்படையும்.

**சிம்மம்** அதிஷ்டமான நாள். பணம் பலவழிகளிலும் வந்து சேரும்.உடலில் சுறுசுறுப்பும் உற்சாகமும் அதிகரிக்கும். சகோதர வழியால் எதிர்பாராத நன்மைகள் வந்து சேரும்.

**கன்னி** சலனம் மிகுந்த நாள். மனக்குழப்பம் கவலை அதிகரிக்கும். உடல் நலம் பாதிக்கப்பட்டு வைத்தியசாலை செலவுகள் உண்டாகும். வருமானக் குறைவால் கடன் சுமை அதிகரிக்கும்

**துலாம்** மத்திமமான நாள். வரவும் செலவும் அதிமாக இருக்கும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். குடும்பத்தில் ஓரளவு அமைதி நிலவும். சகோதர உறவு வலுவானதாக இருக்கும்.

**விருச்சிகம்** அனுகூரமான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். வெளிநாட்டுப் பயண முயற்சி சிலருக்கு அனுகூலமாகும். புதிய வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும்.

**தனுசு** உயர்வான நாள். வருமானம் உயர்வடையும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும்.வியாபாரத்தில் முன்னேற்றமும் வருமானமும்அதிகரிக்கும். உத்தியோகத்தில் பதவி உயர்வு கிடைக்கும்

**மகரம்** யோசனையான நாள். பணத்தட்டுப்பாடு உண்டாகும். குடும்பத்தில் உட்பூசல்கள் காணப்படும். வியாபாரத்தில் போட்ட முதலீடுகள் பெரும் நட்டம் உண்டாகும். மாணவர்களுக்கு கல்வியில் நாட்டம் குறையும்.

**கும்பம்** நன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப உறவில் அன்பும், பண்பும் நிறைந்திருக்கும். வெளிநாட்டுத் தொடர்புகளால் நன்மை உண்டாகும். திருமண காரியங்கள் கைகூடும்.

**மீனம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு மத்திமாகஇருக்கும்.. சகோதர உறவு பலப்படும். எண்ணிய காரியங்கள் தாமதமாகும்.

**சந்திராட்டமநாள்:** கார்திகை 2 ஆம் 3ஆம் 4ஆம் பாதங்கள் ரோகினி, மிருகசீரிடம் 1ஆம், 2ஆம் பாதங்களில் பிறந்தோர் சுப கருமங்களைத் தொடங்குவதைத் தவிர்க்கவும்.

# பல்கலைக்கழக விண்ணப்பப்படிவம் நிரப்புதல் தொடர்பான செயலமர்வு

*கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் இருந்து 2017 இல் க.பொ.த(உ/த) பரீட்சைக்குத் தோற்றி அண்மையில் வெளியான பெறுபேறுகளின் படி பல்கலைக் கழக அனுமதிக்குத் தகைமை பெற்ற வணிகத்துறை மாணவர்களுக்கான பல்கலைக்கழக விண்ணப்பப்படிவம் நிரப்புதல் தொடர்பான செயலமர்வு கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தால் நடத்தப்படவுள்ளது.*

*இச் செயலமர்வு இன்று திங்கட்கிழமை பி.ப ஒரு மணிக்கு கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் அமைந்துள்ள ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.*

*இச்செயலமர்வில் வணிகத்துறை மாணவர்கள் விண்ணப்பிக்கக்கூடிய 31 கற்கை நெறிகள், அவற்றுக்கான அடிப்படைத் தகைமைகள் , அக்கற்கை நெறிகளின் விருப்பொழுகைத் தெரிவு செய்தல், மேலதிக உளச் சார்புப் பரீட்சையினூடாக விண்ணப்பிக்கக் கூடிய பொதுவான கற்கை நெறிகள், இக்கற்கை நெறிகள் தொடர்பான அண்மைக்காலப் போக்குகள் என்பன தொடர் பாக துறை சார் வளவாளர்களால் விளக்கமளிக்கப் படவுள்ளது.*

*எனவே, இச்செயலமர்வில் பல்கலைக் கழக அனுமதிக்குத் தகைமைபெற்ற வணிகத்துறை மாணவர்களையும் , பொறுப்பாசிரியர் ஒருவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.*

*(ப-70)*

# தேர்தல் கண்காணிபில் ‘பவ்ரல்’ சார்பில் 7,000 பேர்

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கண்காணிப்புநடவடிக்கைகளுக்காக 7 ஆயிரம் பேர் ஈடுபடவுள்ளனர் என ‘பவ்ரல்’ அமைப்பு தெரிவித்துள்ளது.

வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் நாடளாவிய ரீதியில் இவர்கள் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

அத்துடன், எதிர்வரும் 22,25 மற்றும் 26 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள தபால் மூல வாக்குப் பதிவுத் தினத்தன்று ஆயிரம் பேர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர் என அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

# நாளை மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய் காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை

**வவுனியா பிரதேசத்தில்** - புளிதறித்த புளியங் குளம் கிராமம், செக்கட்டிப்புலவு கிராமம், கணேசபுரம் கிராமம், நெளுக் குளத்திலிருந்து பம்பைமடு வரை, நெளுக்குளம் தொழிநுட்பக்கல்லூரி, பம்பைமடு பல்கலைக் கழகம் ஆகிய இடங்களிலும் -

**மன்னார் பிரதேசத்தில்** -

பறயனாலங்குளத்திலிருந்து தலைமன்னார் வரை, வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம், அடம்பன் நீர்ப்பாசன சபை, கமலாம்பிகை அரிசி ஆலை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், C.T.B மன்னார், கீரி ஐஸ் தொழிற்சாலை, மன்னார் வைத்தியசாலை, மன்னார நீர்ப்பாசனத் திணைக்களம், மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, ரைமெக்ஸ் கார்மென்ட், விசேட அதிரடிப்படை முகாம், எருக்கலம்பிட்டி பம் கவுஸ், பேசாலை Palmayrah House,வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, மீன்பிடிசமாசம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் வைத்தியசாலை, தலைமன்னார் கடற்படை முகாம், சீனத்துறைமுகம் ஆகிய இடங்களிலும் மின் தடைப்படும் என மின்பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளார்.

(இ)

# வலந்தலை முத்துமாரி ஆலய இராஜகோபுர மஹா கும்பாபிஷேகம்

காரைநகர் வலந்தலை மடத்துக்கரை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் நூதன அதிசுந்தர பஞ்ச தள மணி மண்டப சகித இராஜ கோபுர மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 31 ஆம் திகதி புதன் கிழமை காலை9.49மணிமுதல்11.10 மணிவரையுள்ளசுபவேளையில் இடம்பெறவுள்ளது.

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய பிரதம சிவாச்சாரியார் நித்திய சிரோன்மணி சிவ ஸ்ரீ மு.ப. முத்துக்குமார சுவாமிக் குருக்கள் பிரதிஸ்டா பிரதம குருவாக இருந்து கும்பாபிஷேக கிரியைகளை நடத்தி வைப்பார்.

காரைநகரின் நுழை வாசலில் அமைந்துள்ள இந்த ஆலயத்தின் பஞ்சதள இராஜகோபுர திருப்பணி வேலைகளைப் பூரண உபயமாக பரோபகணி சுப்பிரமணியம் கதிர்காமநாதனும் (சுவிஸ் நாதன்) மணிமண்டப திருப்பணி வேலைகளை கலை மாடக்கோன் சண்முகமும் சிவஞானமும் தமது சொந்த நிதியில் இருந்து அமைத்துக் கொடுத்துள்ளனர்.


கும்பாபிஷேக தினத்தன்று விசேட போக்குவரத்து உதவிகள் செய்யப்பட்டுள்ளன. அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும் என்று பரம்பரை ஆதீன குருவும் நிர்வாகத்தினருமாக பிரம்ம ஸ்ரீ கு.சரவணபவானந்தா தெரிவித்துள்ளார்.

(இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பலரும் பேணும் பசு மகிமை

இலக்கிய கலாநிதி
**பண்டிதமணி மு.கந்தையா**



தமிழர் வாழ்வில் லௌகிகச் செழிப்புக்கும் வழிபாட்டுச் செழிப்புக்கும் ஒரே தரமான உயர் பங்களிப்பது பசு. ‘பட்டி கிழக்கும் பட்டடை மேற்கும்’ என்பது தமிழர் தம் வாழ்விடமான வளவொன்றின் அமைப்பியலில் ஓர் அம்சம். வளவொன்றில் வீட்டிற்கு கிழக்குப் பக்கமாக பட்டி இருக்க வேண்டும். என்ற நியதியை இது காட்டும். பட்டி என்றது பசுப் பட்டிக்கே உரிய பெயர். வெள்ளாடு செம்மறியாட்டுப் பட்டிகளுக்கு அது இரண்டாம் பட்சமான உபசாரம். தமிழர் வாழ்வியலில் பசு ஓம்புதலுக்குக் கொடுக்கப்பட்ட சிறப்பு இத்தகையது.

இயல்பு நிலையான இயற்கை வாழ்வில் வீட்டுக்குப் பரிமளிப்பூட்டுவன சாணம் மெழுகிய நிலம், சாணநீர் தெளித்த முற்றம், சாணப்பரிமணமான விபூதிப்புழக்கம், பால் கொதிக்கும் நறுமணம், தயிர்கடையும் மத்தோசை, தாகசாந்திக்கு மோர் இருத்தல் என்பவை. சமகால வீட்டு நிலைபற்றிய நினைவுகளை ஒரு கணம் ஒத்திவைத்து விட்டு இவற்றை நினைவதிலும் ஆரோக்கிய வாழ்வில் இவற்றின் அத்தியந்த உபயோகத் தன்மைகளை ஆராய்தலிலும் அபாரமான திருப்தி விளைதல் தவிர்க்க முடியாததாகும்.

இனி எந்தவொரு சைவக் கிரியைக்கும் அவசியம் வேண்டியது சாணம் மெழுகிய நிலம், சாணப்பிடியிலமையும் பிள்ளையார், பசுப் பாலை அன்றி அமையாத புண்யாஹ வாசன தீர்த்தம், ஹோமத்துக்காம் பால், தயிர், நெய், சுவாமி பூசையைச் செழிக்க வைப்பன. அபிஷேகத்துக்காம் பால், தயிர், நெய், கோசலம், கோமயம், பூஜா பத்ததிகளில் கோசலத்துக்குப் பெயர் இரத்னோதகம். சாணத்துக்குப் பெயர் அமிர்தமயம் இங்ஙனம் இவற்றின் பெருமை பேணப்பட்டிருப்பதிலேயே ஒரு தனி அருமை, இரத்தினம், அமிர்தங்களின் தன்மை, கோசலத்திலும் சாணத்திலும் உண்மையை நாம் உணர்கிறோமோ இல்லையோ வேறு அது விஷயம். அவை இருக்கவே இருக்கின்றதால் தான் அப்பெயர்கள் அமைந்துள்ளன. ஆகமங்களில் கழிவுப் பொருள்களே உத்தம திரவியங்களாய் இருத்தல் பசு மகிமைக்கு உன்னதமான உரையாணி.

சிவாகமங்களில் இங்ஙனம் பசு அருமை பேணப்படுவது ஒருவகை வேதங்களிற் பசு அருமை பேணப்பட்டுள்ள வகைகள் மற்றும் பலவுள. பசுவை ‘‘அஹன்யா’’ என்ற பெயரால் வேதம் குறிப் பிடுவது அவற்றுள் முதன்மையும் முக்கியமுமான செய்தி.

அஹன்யா- கொல்லப்படதகாதது. ஹனு-கொல், ஹன்யா- கொல்லப்படத்தக்கது., அஹன்யா- கொல்லப்படத்தகாதது. எனல் சொற்பொருள் விளக்கம்.

சிவாகமங்களில் சிவலோக உற்பத்தித் தொடர்பு பசுக்கள் பேரில் விவரிக்கப்பட்டுள்ளது.

சாமவேதத்தில் ஒரு மந்திரம் ஆன் மிகப்பரிவுருக்கமான ஒரு பாணியில் பசுக்களினை வாழ்த்தியிருத்தல் பற்றிக் குறிப்பிடுகிறது.

இனி, ஈழத்தில் ஆதிபுராதன தலைநகராக அகிலப்பிரசித்தி பெற்றிருந்த மாதோட்ட நன்னகரில் அதியுயர் புனிதப் பிராணிகளாக அன்றைய விஸ்வகர்ம மன்னராட்சியிற் பசுக்கள் போற்றப்பட்டிருந்தமையை நினைவூட்டும் பிற்காலச் சிங்கள சாசன ஆணை ஒன்றையும் கவனிக்கலாம்.

‘‘இராமிசம்வதா புணமஹா வொற்றியோ எல மஹகல பாவம் கத்தாக’’ எல-பசு, மஹா வொற்றி-மாதோட்டம், கத்தா- பெறுநர்.

இவ்விதிகளை மீறுவோர் மாதோட்டத்திற் பசுவைக் கொன்ற பாவத்தை அடைவர் என்பது இதன் பொருள்.

மேய்க்கக் கொண்டுபோன பசு தன்பக்கம் தலையை அசைக்க, அது தன்னைக் குத்த முயன்றதாகத்தப் பார்த்தும் பண்ணிக் கொண்டு அதனை அடிக்க முயன்ற இடைச் சிறுவனைத் தடுத்து விசாரசர்மர் இட் டதாக உள்ள ஆணையொன்று நம் பெரிய புராணத்தில் உண்டு. மேற் கண்ட சிங்கள ஆணைக்கு நேர்சமமான தமிழராணையாக அதை ஏற்றுக்கொண்டொழுகுதல் சைவ நடைக்குக் கௌரவமாகும்.

★ ★ ★


## சிவபூமியில் பசுவதை தகுமா?

மக்களுக்கு நல்வழி காட்ட வேண்டிய உள்ளூராட்சிச் சபைகள் வருமான நோக் கத்திற்காக முன்னைய காலங்களில் மாட்டிறைச்சிக் கடைகள் இல்லாத இடமெங்கும் மீண்டும் மீண்டும் விளம்பரம் கோரி மாட்டிறைச்சிக் கடைகளை அமைப்பித்துச் சைவத் தமிழ் மக்கள் மத்தியில் அதனை உண்ணும் பழக்கத்தை ஊக்குவித்தல் முறையா?

பசுக்களைத் தெய்வமாகப் பூசித்து வணங்க வேண்டிய சிவபூமியாகிய நமது மண்ணில், பசுக்களைக் கொல்வதற்குக் கொல்களங்களையும் அமைத்துக் கொடுக்கிறார்களே! இது முறையா? இது தகுமா?

-தர்மதீபம்





# பட்டிப் பொங்கல்

உழவுத் தொழிலுக்கு உறுதுணையாக விளங்கும் ஆவினத்திற்கு நன்றி கூறும் நாளே இந்நாளாகும். பொங்கலிட்ட பிறகு எச்சில் தண்ணீர் தெளித்தல் என்றொரு மரபு மதுரை மாவட்டத்தில் உண்டு. ‘‘பொங்கலோ பொங்கல் மாட்டு பொங்கல் பட்டி பெருக பால் பானை பொங்க நோவும் பிணியும் தெருவோடு போக’’ என்று கூறி மாடு பொங்கல் உண்ட எச்சில் தண்ணீரைத் தொழுவத்தில் தெளிப்பர்.

பொங்கல் தினத்திற்கு அடுத்த நாள் மாட்டுப்பொங்கல் தினமாக கொண்டாடும் வழக்கம் பண்டைக் காலம் தொட்டு சைவத் தமிழ் உழவரிடையே நிலவி வருகின்றது. இவ் விழாவை ‘‘பட்டிப் பொங்கல்’’ எனவும் அழைப்பது வழக்கம். இப் பொங்கல் விழா முக்கியமாக உழவர்களால் தற்பொழுதும் கொண்டாடப்பெற்று வருகின்றது. உழவனின் உயிர்த் தோழனாக இருந்து மாடாக உழைத்த மாடுகளை, கால்நடைகளை போற்றி நன்றி கூறும் நோக்கோடு பொங்கி, விருந்து படைத்து, நன்றிக் கடன் செய்யப் பெறும் நிகழ்வே மாட்டும் பொங்கலாகும். இப்பொங்கல் பொங் குவதால் ‘பட்டி’ பெருகும் என்பது ஐதீகம்.

உழவுக்கும், வண்டி இழுக்கவும், சூடு மிதிக்கவும், நீர் இறைக்கும் சூத்திரத்தைச் சுற்றுவதற்கும் இன்னும் பல தேவைகளுக்கு எருது மாடுகளும், பால், சாணம், இனப் பெருக்கத்திற்கு பசு மாடுகளும் பல வகையில் உழவனுக்கு உதவி செய்கின்றன. சில சந்தர்ப்பங்களில் பசு மாடுகளும் கூட எருது மாட்டின் வேலைகளைச் செய்கின்றன.

மாட்டுப் பொங்கல் தினம் மாடுகளைக் குளிப்பாட்டி, விபூதிக் குறி வைத்து, சந்தனம், குங்குமப் பொட்டுகள் இட்டு, மலர் சாத்தி அல்லது மலர் மாலை சாத்தி, மாட்டின் கொம்புகளுக்கு வர்ணம் பூசி அலங்கரித்து மாட்டுத் தொழுவத்தில் பொங்கல் பொங்கி மாட்டை கடவுளாக மதித்து அதற்கு படையல் படைத்து உண்ணக் கொடுத்து, தாமும் உண்டு மகிழ்வர்.

பொங்கல் தினத்திற்கு அடுத்த நாள் மாட்டுப்பொங்கல் தினமாகக் கொண்டாடும் வழக்கம் பண்டைக் காலம் தொட்டு சைவத் தமிழ் உழவரிடையே நிலவி வருகின்றது. இவ் விழாவை ‘‘பட்டிப் பொங்கல்’’ எனவும் அழைப்பது வழக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பு: பொன்.வேணுகிருஷ்ணா




# "ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?" 399

அண்மையில் மிகக் குறைவாகவே ஊடகக் கவனத்திற்கு வந்திருந்த - பென்டகன் வெளியிட்ட புள்ளிவிவரங்கள், ஈரானுக்கு எதிராக ஒரு புதிய அமெரிக்கப் போருக் காக அபிவிருத்தி செய்யப்படும் தயாரிப்புகளைக் குறிப்பிட்டுக் காட்டும் விதத்தில், பல பாரசீக வளைகுடா நாடுகளில் நடந்து வரும் கூர்மை யான அதிகரிப்புகளோடு சேர்ந்து, மத்திய கிழக்கில் ஒட்டுமொத்தமாக நிலைநிறுத்தப்பட்டுள்ள அமெரிக்கத் துருப்புகளின் எண்ணிக்கை முந்தைய நான்கு மாதங்களில் 33 சதவீத அளவுக்கு அதிகரித்திருப்பதை வெளிப்படுத்தியது.

ஏனைய ஒவ்வொரு விடயத்திலும் நாடுகளுக்கு எதிரான அமெரிக்க இராணுவ ஆக்ரோஷத்தின் அளவு குறித்து நடைமுறையளவில் நன்கு அறியப்பட்டுள்ள நிலை, இந்த அபிவிருத்திகளோ, 'எதிரிக்குத் துப்புக் கிடைத்துவிடும்' என்ற எந்தவொரு கவலையால் இரகசியமாகவோ அல்லது நடைமுறையளவில் மூடி மறைக்கப்பட்டோ வைக்கப்படவில்லை. மாறாக, இது அமெரிக்க மக்களிடம் இருந்து தகவலை மறைத்துவைக்க நோக்கம் கொள்கிறது, அமெரிக்க மக்கள், ஈரான், வடகொரியாவுக்கு எதிராக மற்றும் சீனா மற்றும் ரஷ்யாவுக்கு எதிராகவும் கூட, புதிய மற்றும் சாத்தியமான உலகப் பேரழிவுகரமான போர்களைத் தொடங்குவதை அல்ல, ஆப்கானிஸ்தான், மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்காவில் நடந்து இராணுவ தலையீடுகளைத் தொடர்கின்றமையையும் கூட விரும்பவில்லை.

வெளிநாடுகளில் அரைவாசி மூடி மறைக்கப்பட்ட இரகசியப் போர்களைத் தொடுப்பது, அத்துடன் உள்நாட்டில் தொழிலாள வர்க்கத்தின் ஜனநாயக உரிமைகள் மற்றும் சமூக நிலைமைகள் மீதான தாக்குதல்களைத் தொடுப்பதில், ட்ரம்ப் முன்னைய நிர்வாகங்களிலிருந்து வேறு



பட்ட வகையில் செயற்படவில்லை, மாறாக ஜனநாயகக் கட்சி மற்றும் குடியரசுக் கட்சி நிர்வாகங்கள் இரண்டின் கீழும் கட்டவிழ்ந்துள்ள நீடித்த நிகழ்வுப் போக்கின் விளைவைப் பிரதிநிதித்துவம் செய்கிறார். இவை அமெரிக்க வெளியுறவுக் கொள்கை மீதான பெரும் அதிகாரங்களை அமெரிக்க இராணுவத் தளபதிகளுக்கு முன்பினும் அதிகமாக விட்டுக்கொடுத்துள்ளன. பதவியில் இருக்கும் ஒரு தளபதி தேசிய பாதுகாப்பு ஆலோசகராக சேவையாற்றுகின்ற நிலையில், சமீபத்தில் ஓய்வுபெற்ற இரண்டு கடற்படைத் தளபதிகள் பாதுகாப்புச் செயலர் பதவி மற்றும் வெள்ளை மாளிகையின் தலைமை இராணுவத் தளபதிப் பதவிகளை வகித்து வருகின்ற நிலையில், இந்தப் போக்கு வெறுமனே ட்ரம்பின் கீழ் ஆழப்படுத்

மேலாதிக்கத்தைப் பாதுகாக்க முன்பினும் அதிகமாக இராணுவவாதம் மற்றும் போரைப் பலமாகச் சார்ந்துள்ள ஓர் ஒட்டுண்ணித்தனமான நிதிய செல்வந்தத் தட்டுக்களையே இவ் இரு கட்சிகளும் பிரதிநிதித்துவம் செய்கின்றன. அமெரிக்க ஆளும் ஸ்தாபகத்தின் ஏனைய அமைப்புகளுடன் சேர்ந்து, இக்கட்சிகளுக்கு, தளபதிகளை அடக்கி வைப்பதிலோ அல்லது அரசின் அரசமைப்பு மற்றும் அதில் பொதிந்துள்ள ஜனநாயக உரிமைகளைத் தாங்கிப் பிடிப்பதிலோ எந்த ஆர்வமும் கிடையாது. அதற்குப் பதிலாக, இவை வோல் ஸ்ட்ரீட் உடன் சேர்ந்துகொண்டு, கட்டுப்பாடில்லாத இராணுவ மேலாதிக்கத்தை அடிப்படையாகக்கொண்ட ஓர் அமைப்பு முறையை உருவாக்க ஒன்றுகூடிச் செயற்பட்டு வருகின்றன, இத்தகைய

தப்பட்டுள்ளது.

வடகொரியா, சீனா மற்றும் ரஷ்யாவின் எல்லைகளில் அமெரிக்கப் படைகள் மயிரிழையில் நிற்கையில், போர் - நடத்துவதற்கான அதிகாரங்களை முன்பினும் அதிகமாக இராணுவ உயரதிகாரிகளிடம் தொடர்ந்து ஒப்படைப்பது, ஒரு பிழையான கணக்கீடோ, தவறான புரிதலோ அல்லது தற்செயலான விபத்தோ, முழு அளவிலான அணுஆயுதப் போருக்கு விரைவாக இட்டுச் சென்றுவிடும் அபாயத்தைப் பெருமளவில் அதிகரிக்கிறது.

**போர் அதிகார சட்டங்கள் மீதான ட்ரம்பின் கூடுதலான தாக்குதல், காங்கிரஸில் ஜனநாயகக் கட்சியினரிடம் இருந்து எந்த எதிர்ப்பையும் கொண்டுவரவில்லை. இராணுவத்தால் அல்லது போர் முனைவால் அரசு மேலாளுமை கொள்வதை அவர்கள் எதிர்க்கவில்லை. அவர்களின் கருத்து வேறுபாடு வெறுமனே ஒரு தந்திரோபாயக் குணாம்சம் கொண்டுள்ளது, இது ஒரு புதிய மற்றும் இன்னும் அதிக மூர்க்கமான மோதலுக்குத் தயாரிப்புச் செய்வதில் அமெரிக்க இராணுவ மற்றும் உளவுத் துறை எந்திரத்தின் பிரிவுகளுடன் ஒத்துழைத்துத் தொடுக்கப்பட்ட ரஷ்ய - விரோத விஷமப் பிரசார நடவடிக்கையில் வெளிப்பட்டது.**

தங்களின் செல்வ வளம் மற்றும்

ஒன்றில் தேர்தல்கள், காங்கிரஸ் மற்றும் ஏனைய நிர்வாகத் துறைகளும் கண்துடைப்புகள் என்பதற்கு அதிகமாக ஒன்றுமில்லை என்றாகி வருகின்றன.

## ஜேர்மனியில் தீவிர வலது

இனவெறிமிக்க, புலம்பெயர்ந்தொரு - விரோத தீவிரவலது கட்சியான ஜேர்மனிக்கான மாற்றீடு (AfD) இன் அண்மையில் நடந்த கட்சி மாநாடு ஜேர்மனியில் பாசிஸவாத அரசியலுக்குச் சட்டபூர்வத்தன்மை வழங்குவதில் ஒரு புதிய கட்டத்தைக் குறித்தது. ஹிட்லர் சர்வாதிகாரம் வீழ்ச்சியடைந்து ஏழு தசாப்தங்களுக்குப் பின்னர், ஜேர்மன் ஊடகங்கள் பாசிஸவாதிகளின் அந்த மாநாட்டை



ஒரு மிகப்பெரிய சட்டபூர்வ அரசியல் நிகழ்வாகப் பாவித்தன. அதேவேளையில் ஜேர்மன் ஜனாதிபதி பிராங்க் - வால்டர் ஸ்ரைன்மையர் கூட்டணி பேச்சுகளுக்காக இரண்டு AfD தலைவர்களை அவரது உத்தியோகபூர்வ இல்லத்திற்கு அழைத்து ஒரு காட்சியை அரங்கேற்றினார்.

Björn Höcke இன் கீழ் அமைந்த வலதுசாரி தீவிரவாத, மக்கள்வாத, தேசியவாத கன்னை அம்மாநாட்டில் மேலாதிக்கம் செலுத்திய போதினும் கூட, ஸ்தாபக ஊடகங்களும் அரசியல்வாதிகளும் அதன் அதீத இராணுவவாதம் மற்றும் இனவெறி குறித்தல்ல, மாறாக அது தம்முள் ஐக்கியப்படாமல் இருப்பதற்காக அதை விமர்




சித்தனர்.

அண்மையில் ஜேர்மன் நாளிதழ் Süddeutsche Zeitung குறைகூறியதைப் போல, AfD 'ஒரு தர்மசங்கடமான குழப்பத்தை' வெளிப்படுத்தியது. இதற்குப் பின்னர், அதன் நாடாளுமன்

றக் குழு தன்னை 'அரசியல்ரீதியில் ஐக்கியப்படத் தகைமை கொண்டதாக' எடுத்துக்காட்டியது. Frankfurter Allgemeine Zeitung குறிப்பிடுகையில், 'மிதவாதிகள் மட்டுமல்ல, மாறாகத் தீவிரக் கொள்கையினரும் வெறுமனே ஒரு தலைமையற்ற கட்சியின் பார்வையாளர்களாக இருந்தனர்' என்று குறைகூறி, அதேபோன்றதொரு கண்ணோட்டத்தை வெளிப்படுத்தியது. அம் மாநாட்டை Phoenix காணொலியில் நேரடியாகவே தொலைக்காட்சியில் ஒளிபரப்பிய நிலையில், பல்வேறு கட்சி கன்னைகளுக்கு இடையிலான முரண்பாடுகள் ஒரு விளையாட்டு போட்டியைப் போன்று இருந்ததாகக் கருத்துரைத்தது.

AfD மாநாட்டை மிகவும் அரசியல் முக்கியத்துவத்துடன் எடுத்துக் கொள்ள வேண்டும். ஜேர்மனியில் நீண்டகாலத்திற்கு முன்னர் அருவருக்கத்தக்கதாகக் கருதிக் கைவிடப்பட்ட இனவாதம், மக்கள்வாத, தேசியவாதம் மற்றும் இராணுவவாதத்தை அறிவுறுத்தும் AfD, அதிவலது சக்திகளின் ஒரு வாகனமாகும். அக்கட்சியின் புதிய துணை - தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அலெக்சாண்டர் கௌலான்ட், 'இரண்டு உலகப் போர்களில் ஜேர்மன் சிப்பாய்களின் சாதனைகளை' கூட்டாட்சித் தேர்தல் பிரசாரத்தின்போது பாராட்டிய இவர், துருக்கிய வழிவந்த ஒரு ஜேர்மனியரும் மற்றும் மத்திய அரசின் மக்கள் ஒருங்கிணைவுக்கான கண்காணிப்பாளராக Aydan Özoguz, துருக்கிக்கு 'அனுப்பி வைக்குமாறு' கோரினார். பொருளாதாரப் பேராசிரியர்



Jörg Meuthen கட்சித் தலைவராக அவர் பதவியில் உறுதிசெய்யப்பட்டார்.

**இவ்விதத்தில், கட்சிக்குள்**

**(கேள்வி தொடரும்...)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. 'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.



# உன்னைச் சரணடைந்தேன்



## கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 67

## புலிகளின் மாத்தையாவை சந்தித்தோம்

**பதினோராவது கம்பன் விழா(14.02.1992)**

ஐந்தாண்டு இடைவெளியின் பின் அரங்கேறிய கம்பன் விழா இது. 1992 பெப். 14,15,16,17 ஆகிய திகதிகளில் இவ்விழா நடைபெற்றது. காலை நிழ்ச்சிகள் நாவலர் மணி மண்டபத்திலும், மாலை நிகழ்ச்சிகள் நல்லை ஆதீனத்திலுமாக வெற்றிகரமாய் நடந்தேறின. இடைக்காலத்தில் எனது கோயில் சொற்பொழிவுகளும், எனது தலைமையில் நடந்த பட்டிமண்டபங்களும் தந்த புகழாலும் உறவாலும் யாழ்ப்பாணத்தின் அனைத்துத் தரப்பாரும் இணைந்து நின்று, இவ்விழாவைப் பொலிவித்தனர். இவ்விழாவின் போது ஆதீன மண்டபத்தை அழகாக அலங்கரித்தோம்.

அவ்வலங்கரிப்புச் செய்தவர் பேசிய தொகையை விட, அதிகம் பணங்கேட்டு எங்களோடு முரண்பட்டார். இக்காலகட்டத்தில் யாழ்ப்பாணம் புலிகள் வசமிருந்தது. இவ்விழாவில் விடுதலைப் புலிகளின் துணைத் தலைவர் மாத்தையா, கல்வித்துறைப் பொறுப்பாளர் பேபி. சுப்பிரமணியம், யோகி போன்ற பல இயக்க உறுப்பினர்களும், இயக்கச் சீருடையுடன் சபையில் வந்திருந்து நிகழ்ச்சிகளைக் கேட்டு இரசித்தனர். இளங் கலைஞர் மன்ற சங்கீத பூஷணம் பொன். சுந்தரலிங்கம் கடவுள் வாழ்த்து இசைத்தார். நல்லூர் ஆதீன முதல்வரோடு யாழ் ஆயர்தியோகுப் பிள்ளை ஆண்டகை அவர்களும் கலந்து கொண்டார். புலவர் ஈழத்துச் சிவானந்தன் தலைமையில் பட்டிமண்டபம் நிகழ்ந்தது. புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகத் தலைவர் புதுவை இரத்தினதுரை, கவியரங்கத் தன்று கவிதையின் தலைமையுரை இயற்றினார். முருகையன் தலைமையில் கவியரங்கு நடைபெற்றது. ஒப்பனையோடு அறிஞர்கள் மேடையேறிய, 'இன்று சந்திக்கும் இவர்கள்' எனும் பெயரிலான நாடக அரங்கொன்றை இவ்விழாவிற் தான் முதன் முதல் அறிமுகம் செய்தோம் , இசையறிஞர் கணபதிப்பிள்ளை ,நாடகக் கலைஞர் அரசு, கல்வியதிகாரி சிவானந்தன், விரிவுரையாளர் கலாமணி, வில்லிசைக் கலைஞர் சின்னமணி, கவிஞர் முருகையன், பேராசிரியர் சிவலிங்கராஜா முதலியோர், இவ்வரங்கிற் கலந்துகொண்டனர்.



பதினோராவது கம்பன்விழா (14.02.1992)




மறைந்த தவில் மேதை சின்னராசாவுக்கு நாதஸ்வர வித்துவான் பத்மநாதன் அஞ்சலியுரை ஆற்றினார்.

மகாவித்வான் கணேசையரின் தலைமாணாக்கர், இலக்கணவித்தகர் நமசிவாயதேசிகர், முதன்முதலில் இவ்விழாவிற்தான் கழக மேடையேறினார். ஸ்ரீ.பிரசாந்தன் , ஆறு. திருமுருகன், இரா.செல்வவடிவேல் ஆகியோரின், கழக அரங்கேற்றமும் இவ்விழாவிற்தான் நடைபெற்றது. பிரசாந்தனும் ஆறு திருமுருகனும் இளைஞர் அரங்கத்தில் பேசினர். நிகழ்ச்சிகள் எல்லாமே ஆழத்தாலும் கலைத்துவத்தாலும் பெரு வெற்றி பெற்றன. அரங்கு நிரம்பி வழிந்து வெளியேயும் பலர் காத்து நிற்க, சுவை குன்றாது நாவலர் மண்டபத்தில் எனது தலைமையில் இடம்பெற்ற, வாலி வதை வழக்காடு மன்றம் நெடுங்காலமாக யாழ்ப்பாணத்தில் பேசப்பட்டது. இவ்விழாவிற்தான் அநுவை, நாகராஜன், பண்டிதர் சச்சிதானந்தம், பண்டிதர் வி.பரந்தாமன், கவிஞர் நாவண்ணன், கவிஞர் ப.சத்தியசீலன், விரிவுரையாளர் விநாயகமூர்த்தி, குழந்தைசண்முகலிங்கம், பேராசிரியர் நந்தி, கவிஞர் மன்னவன் கந்தப்பு, பொன்.கணேசமூர்த்தி, கலாமணி, எஸ்.ரி.அரசு, ஈ.சிவானந்தன் போன்ற பல அறிஞர்கள் எங்கள் மேடையில் அறிமுகமாயினர். இவ் விழாவில் நடந்த கவியரங்கில் தனி எழுத்தொன்றைக் கவிஞர்களுக்குத் தலைப்பாய்க் கொடுத்தோம். இக் கவியரங்கம் பலரதும் பாராட்டைப் பெற்றது. விழாவின் நிறைவு நிகழ்ச்சியாக மேன் முறையீட்டுப் பட்டிமண்டபம் நடைபெற்றது. அன்றைய தினம் கூட்டம் அலைமோதியது.

ஆதீனத்தின் வெளிவீதியெல்லாம் ரசிகர்களால் நிரம்பிவழிந்தது. அப்போது மின்சாரம் இல்லை. ஜெனரேட்டர் ஒழுங்கு செய்தே விழா நடத்தினோம். மேன்முறையீட்டுத் தீர்ப்பு வழங்கப்பட்டுக் கொண்டிருந்தபோது ஜெனரேட்டர் பழுதாகத் தொடங்கியது. என்ன செய்வது என்று தெரியவில்லை. அப்போது அந்த ஜெனரேட்டருக்கு உரியவர்தனது கைகளில் சாக்குகளைப் பந்தம் போலச் சுற்றி மெஷினுக்குள் கையைக் கொடுத்து, ஜெனரேட்டர் நின்று விடாமல் இயக்கினார். அன்றைய அவரது துணிவை என்னால் மறக்க முடியாது. இவ்விழா முடிந்ததும் தினமும் கம்பன் கோட்ட மேல் மண்டபத்தில் விதம் விதமாக பலவகையான உணவுப் பண்டங்களுடன் கூடிய, அறு சுவை விருந்தளித்தோம். இம்மரபு தொடர்ந்த விழாக்களிலும் பேணப்பட்டது. அப்போது விடுதலைப் புலிப்போராளிகள் பலர் எமது விழாவிலும், பின்னர் நடந்த விருந்திலும் கலந்து கொண்டு உறவுபாராட்டினர்.

★ ★ ★

**வித்தகர் ஐயா இணைவு**

1992 கம்பன் விழாவில் ஏற்பட்ட தொடர்பால், இலக்கணவித்தகர் நமசிவாயதேசிகருடன் நெருங்கினோம். கெஞ்சிக் கூத்தாடி என்னை அவரது மாணவனாக ஏற்கச்செய்தேன். பின்னர் ரகு, பிரசாந்தன், மணிமாறன் ஆகியோரும் அவரிடம் கற்றார்கள். தன் போதனையால் அவர் ஆழ்ந்த அறிவுக் கதவுகள் பலவற்றை எமக்குள் திறப்பித்தார். அவருடனான உறவு போகப்போக நெருங்கியது. அறிவுலக முயற்சிகளிலிருந்து ஒதுங்கியிருந்த அவரை மெல்ல மெல்ல சமூகத்திற்குள் இழுத்து வந்தோம். பின்நாளில் எங்களை அவர் நிரம்ப நேசித்தார் சைவக் குருக்கள்மார் பரம்பரையில் வந்த அவர், மற்றவர்கள் பார்க்க உண்ணாதவர். அவரது ஆசாரத்தைக் குழப்பாமல் எங்கள் கழகத்தில் வந்து அவரைத் தங்கச் செய்தோம். இரண்டு, மூன்று ஆண்டுகள் கம்பன் கழகத்திலேயே வந்து தங்கியிருந்தார். அறிவுலகத்தினால் மட்டும் அறியப்பட்டிருந்த அவர். எங்கள் கழக மேடைகளில் தொடர்ந்து ஏறி அடிமட்ட சமூக மனிதர்களாலும் அறியப்பட்டார். எங்கள் கழக நிகழ்ச்சிகளின் தரத்தை மிகமிக உயர்த்தினார். பின் நாளில் நான் கொழும்புக்கு இடம் பெயர்ந்த பின்பு எங்களோடு வந்து கொழும்பில் கூடசிலகாலம் தங்குமளவுக்கு, எங்களின் மீதான அவர் அன்பு உயர்ந்தது.

★ ★ ★

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir



வழிமூலம் - ceylon today
ஆங்கிலத்தில் –Seth Cropsey and Bryan McGrath
மொழியாக்கம் – நித்தியபாரதி




# அமெரிக்காவின் கடல்சார் மூலோபாயம்

உலக அரங்கில் தமது நாட்டின் இருப்பு பலவீனமடைந்து வருவதைப் பார்ப்பதை அமெரிக்கர்கள் விரும்புகிறார்கள் என்பதற்கான எவ்வித சாட்சியமும் இல்லை. அமெரிக்காவின் இரு பிரதான அரசியல் கட்சிகளும் பாதுகாப்புவாதக் கொள்கைகளை நோக்கி நகர்ந்துள்ள அதே வேளையில், 2016 இல் இடம்பெற்ற அமெரிக்க அதிபர் தேர்தல், அமெரிக்கர்களின் நாளாந்தமானது எத்தகைய பூகோளமயமாக்கலுக்கு உட்பட்டுள்ளது என்பது தொடர்பான முக்கிய கேள்விகளை எழுப்பியது.

சுதந்திர வர்த்தகம், நீடித்து நிலைத்து நிற்கக்கூடிய வெளிநாடுகளுக்கான கடப்பாடுகள் போன்ற விடயங்களில் அமெரிக்கர்களின் கருத்து என்ன என்பது கருத்து வாக்கெடுப்பின் மூலம் சுட்டிக் காட்டப்படுகிறது. எனினும், தமது நாடு எத்தகைய அச்சுறுத்தல்களை எதிர்நோக்குகின்றது என்பதை அமெரிக்கர்கள் நன்கறிந்துள்ளனர்.

பலமானதோர் இராணுவத்தை நிலையாகக் கட்டியெழுப்புவதன் மூலம் அமெரிக்காவின் உலக அதிகாரத்துவ சக்தி என்கின்ற நிலையைப் பாதுகாக்க வேண்டும் என்பதே அமெரிக்கர்களின் விருப்பமாகும். இதற்கும் மேலாக, மத்திய வரவு – செலவுத் திட்டத்தில் காணப்படும் விருப்புரிமையற்ற செலவீனம் தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்ற போதிலும் அதிகரித்துள்ள சமூகச் செலவீனங்களுக் குச் சார்பாக தேசிய பாதுகாப்பை அர்ப்பணிக்க விரும்பும் அமெரிக்கர்களை அடையாளம்காண்பதென்பது மிகவும் கடினமானதாகும். உலகத் தலைமைத்துவ இருப்பின் மூலம் அமெரிக்காவின் தேசிய பொருளாதாரம், கூட்டணிநாடுகள், அமெரிக்காவெளியுறவு மற்றும் பாதுகாப்புக் கோட்பாட்டைக் கடந்த ஒரு நூற்றாண்டிற்கும் மேலாக நோக்காகக் கொண்டுள்ள அனைத்துலக ஒழுங்குமுறைமை போன்றன நன்மையைப் பெறுகின்றன.

தமது கையை விட்டு உலகத் தலைமைத் துவ நிலை சென்றுவிட்டால் இதனால்தமதுவாழ்வுபாதிக்கப்படும்என்பதை அமெரிக்கர்கள் அறிவார்கள். அமெரிக்கா சாதரணமான ஒரு சக்தி வாய்ந்த நாடல்ல என்பதும், இது தனித்துவமான அதிகாரத்துவம் எனவும் அமெரிக்காவின் அனுபவ முரணாகும். அமெரிக்கா வேறு நாடுகளுக்கு உதவுவதை அமெரிக்கர்கள் விரும்பாவிட்டாலும் கூட இரண்டு உலக மகா யுத்தங்கள் மற்றும் பனிப்போர் மற்றும் செப்ரெம்பர் 11 இற்குப் பின்னா அமெரிக்கா எதிர்நோக்கிய அச்சுறுத்தல்களுக்கு தற்போதும் முகங் கொடுக்க வேண்டியேற்படும். ஆகவே, அமெரிக்கா தொடர்ந்தும் பெரிய சக்தியாக மிளிர்வதைக் கொள்கை வகுப்பாளர்கள் உறுதிப்படுத்த வேண்டியுள்ளனர். இதன் மூலம் மட்டுமே இவ்வாறான அசம் பாவிதங்கள் இடம்பெறும் போதும் அமெரிக்கா தனித்துவமான சக்தியாகச் செயற்பட முடியும்.

பெரும் அதிகாரத்துவப் போட்டி அதிகரித்து வரும் நிலையில் அமெரிக்காவின் உலகத் தலைமைத்துவ இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் பாதுகாப்பதற்கும் அதனை மேலும் மேம்படுத்துவதற்கும் அமெரிக்க அரசியல் தலைவர்கள் மூலோபாய ரீதியாகச் சிந்திக்க ஆரம்பிக்க வேண்டும். இந்த மூலோபாயம், கடல்சார் அதிகாரத்துவம் மற்றும் பூகோள அமைவிட நலன்கள் போன்ற அமெரிக்காவின் தேசிய நலன்களைக் குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டும். அமெரிக்காவின் இரண்டு நட்பு நாடுகளுடனும் இது தனது தரை வழி எல்லைகளைப் பகிர்ந்து கொள்வதுடன் ஏனைய அயல் நாடுகள் மாக்கடல்கள் மூலம் பிரிக்கப்படுகின்றன. இது அமெரிக்காவின் பாதுகாப்புக்குச் சாதகமாக உள்ளது.



கடந்த ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக அமெரிக்கா ஆசியா மற்றும் ஐரோப்பாவில் தனது செல்வாக்கை நிலைப்படுத்தி வருகின்றது என்பதற்கு அப்பால் மேற்குலக அரைக்கோளத்தில் அமெரிக்கா தனது உலகத் தலைமை நிலையைப் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்பது முக்கியமானதாகும். அதாவது அமெரிக்கா தனது இருப்பிடமான மேற்குலக அரைக்கோளத்தில் தனக்கான தலைமைத்துவ நிலையைப் பலப்படுத்தவில்லை.

அதாவது, ஆசியா மற்றும் ஐரோப்பாவில் அரசியல், இராஜதந்திரம், பொருளாதாரம், இராணுவம் போன்ற பல்வேறு நலன்களை அமெரிக்கா பெற்று வருகிறது. இந்த நலன்களைப் பாதுகாப்பதும் இவற்றை நிலைத்திருக்கச்செய்வதும் அமெரிக்கக் கோட்பாட்டின் முன்னுரிமையாகத் தொடர்ந்தும் இருக்க வேண்டும். இதனைத் தக்கவைத்துக் கொள்வதற்கு கடல்சார் மூலோபாயம் மிகவும் காத்திரமான ஒரு கருவியாகும். கடல் சார் மூலோபாயம் என்பது பெரும் மூலோபாயத்தின் உப பகுதியாகும்.

இவ்விரு மூலோபயங்களுக்கும் இடையிலான சிறந்த தொடர்பு குறித்து கடற்படை போர்க் கல்லூரியின் பேராசிரியர் ஜோன் பி.ஹற்றன்டோர்பால் வரையறுக்கப்பட்டுள்ளது:

உலகின் சக்தி மிக்க கடற்படை அதிகாரத்தைக் கொண்ட அமெரிக்காவின் அணுகுமுறை ஒத்திசைவான கடல்சார் மூலோபாயமாக மேலும் விரிவாக்கப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும். பெரும் அதிகாரத்துவப் போட்டி மீண்டும் எழும் போது இது மிகவும் அவசியமானதாகும். அமெரிக்காவின் தற்போதைய கடல்சார் மூலோபாயம் ஒத்திசைவானதாக இல்லை என்பது கெட்டவாய்ப்பாகும். அதிகாரத்துவப் போட்டியை முகங்கொடுப்பதற்கு உகந்த முறையில் இந்த மூலோபாயம் உருவாக்கப்படவில்லை. அதிகாரத்துவ யுத்தத்தில் பங்குகொள்ளும் மரபுசார் படைகளின் முக்கியத்துவத்தையும் அவற்றின் நோக்கங்களையும் இந்த மூலோபாயம் அடையாளம் கண்டு கொள்ளவில்லை.

மிகவும் துணிச்சலுடன் செயற்படும் கடற்படை வீரர்களுக்கு உத்வேகத்தை வழங்கும் மூலோபாயமாகவும் இது காணப்படவில்லை. அத்துடன், அமெரிக்கக் கடற்படையின் கட்டமைப்பு மிகவும் சிறியதாகவும் தேவையான உபகரணங்களையும் கொண்டிருக்கவில்லை. பூகோள அமைவிட முக்கியத்துவம் மிக்க நாடுகளுடன் அமெரிக்கா போதியளவு கடல்சார் கூட்டுச் செயற்பாடுகளையும் கொண்டிருக்கவில்லை. மிகப் பொருத்தமான மூலோபாயத்தை உருவாக்கக் கூடிய கடல்சார் தொழில்துறைத் தளம் ஒன்றை உருவாக்குவதற்கான முதலீட்டை இடவேண்டிய தேவையை அமெரிக்கா கொண்டுள்ள போதிலும் இது தொடர்பில் அமெரிக்கா அமைதி காத்து வருகிறது.



சுதந்திர உலகின் தலைமை மற்றும் உலகின் முதன்மை மிக்க அரசியல், இராணுவ, பொருளாதார மற்றும் இராஜதந்திர சக்திமிக்க நாடு என்ற வகையில் அமெரிக்கா தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு எத்தகைய கடல்சார் மூலோபாயத்தை உள்ளடக்கிய பெரும் மூலோபாயம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்பது இங்கு வலியுறுத்தப்படுகிறது. இவ்வாறானதொரு மூலோபாயம் புதிப்பிக்கப்பட்ட பெரிய அதிகாரத்துவப் போட்டிக்கு முகங்கொடுக்கும் பல்வேறு தலைமைத்துவப் பதவி நிலைகளைப் பாதுகாப்பதற்கும் தக்க வைத்துக் கொள்வதற்குமான மூலோ பாயம் ஒன்றை உருவாக்கிக் கொள்ள வேண்டும். இவ்வாறான மூலோபாயம் 'பனிப்போர்' மூலோபாயத்திற்குத் திரும்பிச் சென்றுவிட்டதாக எவரும் கருதினாலும் கூட இது தொடர்பில் அமெரிக்கா பின்நிற்கக்கூடாது.

சோவியத் ஒன்றியம் உடையும் ஆபத்தைச் சந்தித்த போது அமெரிக்கா பல பத்தாண்டுகளாக ஒத்திசைவான மூலோபாய நாடாகச் செயற்பட்டது. இதேபோன்றே ரஷ்யா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளும் வர்த்தக, பிராந்திய அதிகாரத்திலும் பூகோள ஒழுங்கை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளிலும் ஈடுபடும் இந்த வேளையில் இவற்றை முறியடிப்பதற்கு அமெரிக்கா சோவியத் ஒன்றிய உடைவின் போது கடைப்பிடித்த ஒத்திசைவான மூலோபாய அணுகுமுறையைத் தற்போதும் செயற்படுத்த வேண்டும். கடல்சார் மூலோபாயம் ஒன்றை அமெரிக்கா உருவாக்குமாயின் இதன் மூலம் இது தனது பாரம்பரிய அணுகுமுறையான 'முடிவுகள், வழிமுறைகள், கருத்துக்கள்' என்பதைச் சமன் செய்வதில் சிக்கல்கள் ஏற்படும் என சிலர் நினைக்கலாம்.

இந்த அணுகுமுறை பொதுவாக இராணுவ மற்றும் நடவடிக்கை சார் மூலோபாயத்திற்கே பொருத்தமானதாகும். மிகவும் முக்கிய காரணத்திற்காக உருவாக்கப்படும் மூலோபாயத்திற்கு இது பொருத்தமற்றதாகும். பெரும் மூலோபாயத்தில் பல துணை மூலோபாயங்களை உள்ளடக்க முடியும்.

அமெரிக்காவின் வரலாற்றை எடுத்துப் பார்த்தால் அமெரிக்காவின் நிர்வாகத்தில் மாற்றம் ஏற்படுவதை விட மூலோபாய மறுசீரமைப்பு என்பது மிகவும் நம்பகமான ஒன்றாக இருக்கவில்லை. அணுவாயுத விரிவாக்க அச்சுறுத்தலால் பெரும் அளவிலான மரபுசார் தாக்குதலிலிருந்து சோவியத் யூனியனைத் தடுத்து நிறுத்துவதற்குக் கைக்கொள்ளப்பட்ட பனிப்போர்க் கால அணுகுமுறையை மீளவும் ஆராயவேண்டியது முக்கியமானதாகும். ஆகவே, அணுவாயுத யுத்தத்தைத் தடுப்பதற்கு மரபுசார் யுத்தத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

அமெரிக்காவின் இராணுவ சக்தி அணுவாயுத அல்லது கடற்படை அதிகாரத்தை விட அதிக வலுவுள்ள மரபுசார் யுத்தம் ஒன்றைத் தடுப்பதற்கான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கவில்லை. ஆகவே, எவ்வித தாமதமுமின்றி அமெரிக்காவின் இராணுவ வலு, மேலும் பலப்படுத்தப்பட வேண்டும். உலகெங்கும் அமெரிக்காவின் இராணுவ வலு பலப்படுத்தப்பட்டால் மட்டுமே ரஷ்யா மற்றும் சீனாவால் முன்னெடுக்கப்படும் ஆக்கிரமிப்புக்களைத் தடுக்க முடியும். அமெரிக்காவின் அரசியல் தலைமை இராணுவப் பலம் மற்றும் பொருளாதாரம் பலம் மற்றும் இராணுவத்தைப் பலப்படுத்துவதற்கான பல்வேறு நலன்களையும் ஒன்றுடன் ஒன்று இணைப்பதற்கும் பொதுமக்களின் ஆதரவைக் கட்டியெழுப்புவதற்குமான நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

அமெரிக்காவின் டொலர் நாணயம் உலகின் பயன்பாட்டு நாணயமாக உள்ளதால் இது அமெரிக்கர்களுக்கு பெரும் நலனைக் கொடுக்கிறது. அமெரிக்காவின் பலம் மற்றும் இதன் அரசாங்கத்தின் நிலைத்தன்மை மற்றும் உலகளாவிய செல்வாக்கு போன்றன அமெரிக்காவுக்கு நலன் பயக்குகிறது. அத்துடன், அமெரிக்கக் கடற்படைச் சக்தியின் உத்தரவாதத்துடன் கடல்களைத் தாண்டி அமெரிக்காவின் துறைமுகங்களை அடையும் பொருள்கள் மற்றும் மூலப்பொருள்களைப் பெற்றுக்கொள்வதன் மூலம் அமெரிக்காவிலுள்ள நுகர்வோர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் பயன் பெறுகின்றனர்.

அமெரிக்காவின் கடல்சார் பெரும் மூலோபாயம் அமெரிக்கா தனது கூட்டாளி நாடுகள் மற்றும் உறவுகளை மீளவும் மதிப்பீடு செய்வதை உள்ளடக்க வேண்டும். குறிப்பாக, பூகோள மூலோபாய பாதிப்பை அடையாளம் காண்பதற்கும் அதனை முறியடிப்பதற்குமான வழிமுறைகளை உள்ளடக்க வேண்டும். உலக வர்த்தகப் பாதைகள், கடல்வழிப் பாதைகள், கடல்சார் முக்கிய மையங்கள் போன்றன அமெரிக்காவின் இராஜதந்திரம் மற்றும் அனைத்துலக உறவுகள் போன்றவற்றில் முக்கிய பங்குகளை ஆற்ற வேண்டும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்விக் கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

வினாத்தாள் 4

தரம்-5 | பிரபல ஆசிரியர் | பகுதி II | நேரம்- 1 மணித்தியாலம் 15 நிமிடம்

1. பின்வரும் பாடலை வாசித்து வினாக்களிற்கான விடைகளை பாடலில் இருந்து தெரிவு செய்து எழுதுக.

சுத்தமே என்றும் சுகமளிக்கும் - தீய
சோம்பலை ஓட்டித் துரத்தும், அம்மா !
இத்தரை வாழ்வைப் பெருக்கும், அம்மா ! - அதற்கு
ஈடேதும் இல்லையான் சொன்னேன், அம்மா !

கந்தையானாலும் கசக்கியுடு - என்னும்
கற்பனை போற்றி நடப்பாய், அம்மா !
சுந்தர மேனி உண்டாகும் அம்மா ! - இந்தச்
சுத்தத்தின் நன்மை சிறிதோ? அம்மா !

1) எமக்கு சுகமளிப்பது எது?
..........................................................................................

2) பாடலில் இடம்பெறும் பழமொழியை எழுதுக.
..........................................................................................

3) 'தேகம்' என்பதன் ஒத்தகருத்துள்ள சொல்லை எழுதுக.
..........................................................................................

4) 'சுறுசுறுப்பு' என்பதன் எதிர்க்கருத்துள்ள சொல்லை எழுதுக.
..........................................................................................

5) பாடலில் வந்துள்ள பெயரடை மொழி ஒன்றை எழுதுக.
..........................................................................................

6) பாடலில் இடம்பெறும் தன்மை ஒருமை வினைச்சொல்லை எழுதுக.
..........................................................................................

7) சுகமளிக்கும் என்னும் சொல்லைப் பிரித்து எழுதுக.
..........................................................................................

8) வினை அடைமொழிச் சொல் ஒன்று எழுதுக.
..........................................................................................

9) உயர்திணை பெண்பால் ஒருமைச் சொல் ஒன்று எழுதுக.
..........................................................................................

2. அ) வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1) ............................ (கைமாறு / கைம்மாறு) கருதாமல் பிறருக்கு உதவுவது நன்று.
2) அவன் ............................ (கோடரி / கோடலி) கொண்டு மரத்தைத் தறித்தான்.
3) நண்பர்கள் ............................ (தேநீர் / தேனீர்) விருந்தில் கலந்து கொண்டனர்.

ஆ) தொடர்மொழிகள் குறிக்கும் தனிச் சொல்லை எழுதுக.

1) ஒரே பாடசாலையில் ஒன்றாகக் கற்பவர்கள் ............................
2) வெப்பமும் வரட்சியுமுடைய மணற் பிரதேசம் ............................
3) விண்செலவு செய்பவன் ............................
4) கடவுள் இல்லை என்று வாதிடுபவன் ............................


3. பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

1) Hurry up please ............................
2) Let's go ............................
3) May I go home ............................





- நிரு பாடசாலையிலிருந்து வீட்டுக்கு வந்த பாதையின் வரிப்படம் கீழே தரப்பட்டுள்ளது. அதனை அடிப்படையாகக் கொண்டு 17ம், 18ம் வினாக்களுக்கு விடை தருக.



17. எத்தனை தடவைகள் தெற்கு நோக்கி பாடசாலை சென்றுள்ளான்?
1) 4 தடவைகள் 2) 3 தடவைகள் 3) 5 தடவைகள்

18. எத்தனை தடவைகள் வலது பக்கம் திரும்பியுள்ளான்?
1) 7 தடவைகள் 2) 6 தடவைகள் 3) 5 தடவைகள்

19. பின்வரும் கோவைப் படத்திலுள்ள கோலத்திற்கு ஏற்ப தொடர்ந்து வரக்கூடிய பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.

069 → 690 → 906 → 069 → 690 → ?


1) 906 2) 069 3) 690

- 20, 21ம் வினாக்களிற்கு வெற்றிடத்தில் வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.

20.

| | | | |
|---|---|---|---|
| 3 | 3 | 4 | 5 |
| 2 | 1 | 2 | 0 |
| 6 | 3 | 8 | ..... |

1) 5
2) 0
3) 8


21. 


1) 55
2) 42
3) 85


- 22ம், 23ம் வினாக்களுக்கு கீழே உள்ள தரவினைப் பயன்படுத்தி விடை தருக.
கமால் 15 நிமிடத்தில் 8 பப்படம் செய்வான்.
விமல் 12 நிமிடத்தில் 10 பப்படம் செய்வான்.
சமன் 20 நிமிடத்தில் 16 பப்படம் செய்வான்.

22. இவர்களில் குறைந்த நேரத்தில் கூடுதலான பப்படங்களைச் செய்பவர் யார்?
1) கமால் 2) விமல் 3) சமன்

23. இவர்கள் மூவரும் அரை மணித்தியாலத்தில் எத்தனை பப்படங்கள் செய்வார்கள்?
1) 65 2) 84 3) 60

24. 


படத்தில் காட்டப்பட்டுள்ள இப்பிள்ளை வலஞ்சுழியாக ½ சுற்றுத் திரும்பினால் பிள்ளை நிற்கும் திசை எது எனத் தெரிவு செய்க.
1) தெற்கு
2) தென்மேற்கு
3) வடமேற்கு

25. 



இத்திண்ம உருவின் நிழற்றிய பகுதிகள் பொருந்தும் வகையில் ஒட்டும்போது தோன்றும் உருவின் உச்சிகள் எத்தனை?
1) 6
2) 8
3) 5







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 26ம், 27ம் வினாக்களுக்கு முகம் பார்க்கும் கண்ணாடி வைக்கப்பட்டுள்ள முறைக்கேற்ப பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

26.  எனில் 

1)   2)   3) 

27. 



1)   2)   3) 




28. ஒரு மோட்டார் வண்டி ஒன்று ஒரு லீற்றர் பெற்றோலில் 60 km செல்லும். 5 லீற்றர் பெற்றோல் நிரப்பிக்கொண்டு 250 km பயணித்தது. மொத்தமாக 330 km பயணிப்பதற்கு மேலும் தேவைப்படும் பெற்றோலின் அளவைத் தெரிவு செய்க.
1) ½ ℓ  2) 1ℓ  3) 1½ ℓ


29. மூன்று மனிதர்கள் 10 நாட்களில் செய்து முடிக்கத் திட்டமிடப்பட்டிருந்த வேலையொன்றை 5 மனிதர்கள் எத்தனை நாட்களில் செய்து முடிப்பர்?
1) 5 நாட்களில்  2) 6 நாட்களில்  3) 8 நாட்களில்




30. பிள்ளை ஒன்று பாய்ந்து சென்ற ஒழுங்கு முறை 1, 3, 6, 10, .... என்ற வகையில் உள்ளது எனில் 5வது பாய்ச்சலில் பாயும்போது எந்த இலக்கத்தில் நிற்கும்?
1) 19  2) 20  3) 21

- 31ம், 32ம் வினாக்களில் தரப்பட்டுள்ள இரு உருக்களையும் இணைக்கும் போது பெறப்படும் உருவைத் தெரிவு செய்க.

31. 1)   2) 

1)   2)   3) 

32. 




1)   2)   3) 



வினாத்தாள் 4 பகுதி- I இன் தொடர்ச்சி...



33. நிரு குறித்த இடத்திலிருந்து பயணம் செய்த திசையும் தூரமும் தரப்பட்டுள்ளது.
வடக்கு 100m → மேற்கு 100m → தெற்கு 150m → கிழக்கு 200m → வடக்கு 50m
இதன்படி அவளின் பயணப் பாதையைக் காட்டும் உரு

1)   2)   3) 

34. ஆரணியை விட 1 மாதமும் 20 நாட்களும் இளையவள் தரணி. தரணிக்கு 2014.06.25ம் திகதியன்று 11 வயது ஆகும் எனின், ஆரணியின் பிறந்த திகதி
1) 2003.07.05  2) 2003.05.05  3) 2003.08.05

35. கீழே ஒரேயளவான தளவுருவங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றைக் கொண்டு இரு திண்ம உருக்களை ஆக்கக்கூடிய தளவுருவங்களின் தொகுதியைத் தெரிவு செய்க.




1) A, E, F, D / C, G, H  2) A, C, E, F / D, H, G  3) A, B, C, D / F, G, E

36. “பொங்கும் மனப் பூரணமே பொன்றாத செல்வம்” என்னும் சொற்றொடர் உணர்த்துவது
1) பொறுத்தார் பூமியாள்வார்
2) காற்றுள்ள போதே தூற்றிக்கொள்
3) செல்வம் என்பது சிந்தையின் நிறைவே

37. “எந்தத் தொழிலிலும் போட்டித்தன்மை இருந்தால் உயர்வு அடையலாம்” என்னும் கருத்தை உணர்த்தும் பழமொழி
1) கண்டது கற்கப் பண்டிதனாவான்
2) காற்றுள்ள போதே தூற்றிக்கொள்
3) கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வேண்டும்

38. 2016 பெப்ரவரி 29ந் திகதி பிறந்த குழந்தை பிறந்தநாள் கொண்டாடுவது
1) 2017 பெப்ரவரி 29  2) 2018 பெப்ரவரி 29  3) 2020 பெப்ரவரி 29

மாணவர்கள் சிலர் பெற்ற புள்ளிகளுக்கேற்ப அவர்கள் குழுக்களாக்கப்பட்ட முறை பின்வரும் அட்டவணையில் உள்ளது. அதனைக் கொண்டு 39ஆம், 40ஆம் வினாக்களுக்குரிய விடையினைத் தெரிவு செய்க.

| குழு | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| A | 51 - 60 புள்ளிகள் |
| B | 61 - 70 புள்ளிகள் |
| C | 71 - 80 புள்ளிகள் |
| D | 81 - 90 புள்ளிகள் |
| E | 91 - 100 புள்ளிகள் |

39. நிலா குழு B யிலும், கலா குழு A யிலும் இருக்கிறார்கள் எனின், அவர்கள் பெற்ற புள்ளிகள் முறையே
1) 58, 65  2) 68, 59  3) 65, 80

40. பாலு 68 புள்ளிகளும், உமா 87 புள்ளிகளும் பெற்றார்கள் எனின், அவர்கள் இருக்கத்தக்க குழுக்கள் முறையே
1) B, E  2) C, A  3) B, D

# தென்னாபிரிக்காவில் மர்ம நோய் குழந்தைகள் உட்பட 60 பேர் சாவு



ஜோஹனஸ்பேர்க்,ஜன.15

தென்னாபிரிக்காவில் லிஸ்டீரியோசிஸ் அல்லது லிஸ்டீரியா என்ற மர்ம நோய் தாக்கியதில் 60 பேர் பலியாகியுள்ளனர்.

தென்னாபிரிக்காவில் லிஸ்டீரியோசிஸ் அல்லது லிஸ்டீரியா என்று அழைக்கப்படுகிற மர்ம நோய், மனிதர்களைத் தாக்கி வருகிறது.

இந்த நோய்க்கு அங்கு 60 பேர் பலியாகி உள்ளனர். மேலும் 750 பேருக்கு இந்த நோய் தாக்கி இருக்கின்றமை உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தத் தகவல்களை உலக சுகாதார நிறுவனம் உறுதி செய்து உள்ளது. இந்த நோய்க்குக் காரணமான பக்ரீரியா, மண், தண்ணீர், பால்பண்ணை பொருள்கள், கடல் உணவு, பழங்கள் மற்றும் காய்கறிகள் ஆகியவற்றில் இருக்கின்றமை தெரியவந்துள்ளது. சின்னஞ்சிறு குழந்தைகள்தான், பெரும்பாலும் இந்த நோயின் இலக்காக இருக்கின்றனர் என உலக சுகாதார நிறுவனத்தின் செய்தி தொடர்பாளர் கிறிஸ்டியன் லின்ட்மீயிர் தெரிவித்துள்ளார். இந்த நோய் தாக்கியவர்களில் 40 வீதத்தினர் குழந்தைகள் தான் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

லிஸ்டீரியோசிஸ் கடுமையான நோய் என்றபோதிலும்கூட, அது தடுக்கக்கூடியது, குணப்படுத்தக்கூடியதுதான் என்று கூறப்படுகிறது.

## பட்டுப்பாதைத் திட்டத்திற்கு உதவும் வகையில் 2 செயற்கைக்கோள்களைச் செலுத்தியது சீனா

அடுத்த கட்டப் பொருளாதார நகர்வின் முக்கிய திட்டமாகக் கருதப்படும் பட்டுச்சாலைத் திட்டத்திற்கு உதவும்வகையில்பெய்டோ-3 என்றஇரண்டுசெயற்கைக் கோள்களைச்சீனாநேற்று முன்தினம் விண்ணில் வெற்றிகரமாகச் செலுத்தியுள்ளது.

சீனா பி.டி.எஸ். திட்டத்தின் கீழ் பல பெய்டோ-3 வழிகாட்டி செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தி வருகிறது. அந்த வரிசையில் இந்த ஆண்டு மட்டும்18 வழிகாட்டிசெயற்கைக்கோளை விண்ணில் செலுத்தவுள்ளது. அதன் ஒருபகுதியாக நேற்றுமுன்தினம் 26 மற்றும் 27 ஆவது செயற்கைக்கோள்களைச் செலுத்தியுள்ளது.

சிச்சுவான் மாகாணத்தின் ஜியாஸ் செயற்கைக் கோள் மையத்திலிருந்து ரொக்கெட் மூலம் செயற்கைக்கோள்கள் செலுத்தப்பட்டன. சீனாவின் மைக்ரோ செயற்கைக்கோள்கள் தயாரிக்கும் நிறுவனம் இன்று விண்ணில் செலுத்தப்பட்டசெயற்கைக் கோள் மற்றும் ரொக்கெட்டை வடிவமைத்துள்ளது.

தனது பொருளாதாரத்தை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு செல்ல முக்கிய திட்டமாகக் கொண்டு வரப்பட்டுள்ள பட்டுசாலைத் திட்டத்தை மேம் படுத்தும் வகையில் இந்தச் செயற்கைக்கோள்கள் அனுப்பப்பட்டுள்ளன. உலகம் முழுவதும் துறைமுகம், ரயில்வே மற்றும் பல திட்டங்களைச் சீனாவுடன் இணைக்கும் வகையில் பட்டுச்சாலைத் திட்டம் என்ற பெயரில் பல மில்லியன் டொலர் செலவில் சீன அரசால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## செவ்வாய்க் கிரகத்தில் பனிப்பாறைப் படிமங்கள்

செவ்வாய்க் கிரகத்தின் நிலப்பரப்பில் பனிப்பாறைப் படிமங்கள் இருக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது என்று விண்வெளி ஆய்வுவிஞ்ஞானிஷேன்பைரன்தெரிவித்துள்ளார்.

செவ்வாய் கிரகத்தில் அமெரிக்காவின் நாசா மையம் தற்போது ஆய்வு மேற்கொண்டு வருகிறது. கியூரியாசிட்டி என்ற விண்கலம் அங்கு முகாமிட்டு செவ்வாய் கிரகத்தின் நில அமைப்பு, சுற்றுச் சூழல், தட்பவெப்ப நிலை தொடர்பாகத் தகவல்களைப் புகைப்படம் மூலம் அனுப்பி வருகிறது.

இந்தநிலையில், அங்கு தண்ணீர் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்னோடியாக செவ்வாய் கிரகத்தின் நிலப்பரப்பில் பனிப்பாறை படிமங்கள் இருக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

நிலப்பரப்பில் இருந்து 100 மீற்றர் வரை அவை படர்ந்து கிடக்கின்றன. இது போன்ற பனிப்பாறைகள் அங்கு 8 இடங்களில் இருக்கின்றன என அரிசோனா பல்கலைக் கழகத்தின் விண்வெளி ஆய்வு விஞ்ஞானி ஷேன் பைரன் தெரிவித்துள்ளார்.

செவ்வய் கிரகம் செல்லும் விஞ்ஞானிகள் தங்கள் தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள முடியும். ஒரு வாளியும், துண்டும் கொண்டு போனால் போதும் எனக் கேலியாகத் தெரிவித்துள்ளார்.

### மோசமான இனவெறிப் பேச்சு:

# ட்ரம்ப் மன்னிப்புக் கோர வேண்டும்; 55 ஆபிரிக்க நாடுகள் வலியுறுத்தல்

வொஷிங்டன்,ஜன.15

அமெரிக்க அதிபர் ட்ரம்பின் இனவெறி பேச்சுக்கு ஆபிரிக்க யூனியனில் உள்ள 55 நாடுகளும் அவருக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தி உள்ளன.

வெளிநாடுகளில் இருந்து வெளியேறி அமெரிக்காவில் அகதிகளாகப் பலர் குடியேறி வருகின்றனர். அது தொடர்பான ஆய்வுக் கூட்டம் தலைநகர் வொஷிங்டனில் உள்ள வெள்ளை மாளிகையில் இடம்பெற்றது.



செனட் உறுப்பினர்கள் மற்றும் எம்.பி க்கள் கலந்து கொண்ட இக்கூட்டம் அதிபர் ட்ரம்ப் தலைமையில் நடந்தது. அப்போது ஹைதி மற்றும் ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் இருந்து வந்து அகதிகளாகக் குடியேறியவர்கள் தொடர்பாக ட்ரம்ப் பேசினார்.

அப்போது மிகமோசமான அருவருக்கத் தக்க நாடுகளில் இருந்து வருபவர்களை நாம் ஏன் வரவேற்க வேண்டும். அவர்களால் அமெரிக்கப் பொருளாதாரம் எந்த விதத்தில் வளர்ச்சி அடைந்துள்ளது. எனவே, அவர்களை உடனடியாக வெளியேற்ற வேண்டும்.- என்றார்.

இதற்கு அவரது குடியரசு கட்சிமற்றும்எதிர்க்கட்சியான ஜனநாயகக்கட்சியைச்சேர்ந்த பி க்கள் எதிர்ப்பும், கண்டனமும் தெரிவித்தனர்.

இந்தநிலையில், ஆபிரிக்க யூனியனில் உள்ள 55 நாடுகளும் ட்ரம்பின் பேச்சுக்கு எதிராகப் போர்க் கொடி உயர்த்தியுள்ளன.

ட்ரம்பின் பேச்சில் இனவெறி தெரிகிறது. அதற்காக அவர் மன்னிப்புக் கேட்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. இதற்கு ட்ரம்ப் மறுப்புத் தெரிவித்துள்ளார். எனது பேச்சில் உள்நோக்கம்எதுவும்இல்லை எனவும் கூறியுள்ளார்.

### பருவ நிலை மாற்றத்துக்கு எதிரான போராட்டம்:

# இந்தியா, சீனாவுக்கு ஐ.நா. பாராட்டு



பருவநிலை மாற்றத்திற்கு எதிரான போராட்டத்தில் இந்தியா, சீனா ஆகியவை வலிமையான உறுதியுடன் உள்ளன என்றும், சிறப்பாகத் தலைமையேற்று நடத்தி வருகின்றன என ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் அண்டோனியோ குட்டரஸ் தெரிவித்துள்ளார்.

குளோபல் வோர்மிங் என்றழைக்கப்படுகிற உலக வெப்பமயமாதல் பிரச்சினைக்குக் காரணமான பசுமை குடில் வாயுக்களின் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்த, அமெரிக்கா மற்றும் 187 நாடுகள் செய்துகொண்ட ஒப்பந்தம், பரிஸ் பருவநிலை மாற்ற ஒப்பந்தம் ஆகும்.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஒபாமா காலத்தில் ஏற்படுத்தப்பட்ட இந்த ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகியது. இதற்கான அறிவிப்பைத் தற்போதைய ஜனாதிபதி ட்ரம்ப் கடந்த ஜூன் மாதம் வெளியிட்டார்.

இதையடுத்து, நோர்வே பிரதமர் எர்னா சோல்பெர்க் ட்ரம்பை வெள்ளை மாளிகையில் சந்தித்துப் பேசினார். அப்போது, அமெரிக்காவுக்கு சாதகமான அம்சங்கள் அதில் சேர்க்கப்பட்டால், பருவநிலை மாற்றம் தொடர்பான பரிஸ் ஒப்பந்தத்தில் அமெரிக்கா மீண்டும் சேர வாய்ப்புள்ளது.- என்றார்.

ட்ரம்பின் இந்த அறிவிப்பைத் தொடர்ந்து பரிஸ் பருவநிலை மாற்ற ஒப்பந்தத்தில் அமெரிக்கா மீண்டும் இணையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், ஐக்கிய நாடுகள் சபையில் நடந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பொதுச் செயலாளர் அண்டோனியோ குட்டரஸ் பேசியவை வருமாறு:-

பருவநிலை மாற்றம் நம்மைத் தோற்கடிக்க அனுமதிக்கக் கூடாது. அதே நேரத்தில் இந்தப் போராட்டத்தில் நாம் இன்னும் வெற்றி பெறவில்லை. பருவநிலை மாற்றம் காரணமாக ஆபிரிக்க நாடுகள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. அங்கு வறட்சி உருவாகியுள்ளது. சிறிய தீவுகளில் சூறாவளி மற்றும் கடல் நீர்மட்டம் அதிகரித்து வருகிறது.

இந்தப் போராட்டத்தில் மற்ற நாடுகள் பங்கேற்பதில் தயக்கம் காட்டி வருகின்றன. உலகப் பொருளாதாரத்தில் பெரிய பொருளாதாரமாக உருவெடுத்து வரும் இரண்டு நாடுகள், போராட்டத்தில் முன்னின்று நடத்தி செல்ல உறுதி பூண்டுள்ளன. அந்த நாடுகள் சீனா மற்றும் இந்தியா.

பருவநிலை மாற்றத்தின் அச்சுறுத்தல்களை நாம் சமாளிக்கத் தவறியமையால், அதன் பாதிப்புகளை நாம் எதிர்கொண்டு வருகிறோம். இந்நிலையில், உலகின் மிகப் பெரிய பொருளாதார சக்திகள், பருவநிலை மாற்றத்திற்கு எதிரான போராட்டத்திற்குத் தலைமை ஏற்று அதன் பாதிப்புகளிலிருந்து நம்மைக் காக்க முயற்சி செய்து வருகின்றன என்று தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir




# இந்திய இராணுவத் தளபதி பிபின் ராவத் கருத்துக்கு பாகிஸ்தான் கடும் கண்டனம்

## அணு ஆயுதப் போருக்கும் சவால்

இஸ்லாமாபாத்,ஜன.15

எங்களின் பலத்தைச் சோதித்து பார்க்கட்டும், யார் பலம் வாய்ந்தவர்கள் பார்த்து விடலாம் என பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் கவாஜா அசிப் மிரட்டல் விடுத்துள்ளார்.

இந்திய இராணுவத் தளபதி பிபின் ராவத் டெல்லியில் கடந்த 12ஆம் திகதி செய்தியாளர்களுக்குப் பேட்டி யளித்தார். அப்போது தீவிரவாதிகளைப் பாகிஸ்தான் கையாளும் முறை தொடர்பாக சமீபத்தில் அதிருப்தி தெரிவித்துள்ள அமெரிக்காவின் எச்சரிக்கை தொடர்பாகக் கருத்து வெளியிட்ட அவர், பாகிஸ்தானில் உள்ள தீவிரவாதிகள் துடைத்தெறியப்பட வேண்டியவர்கள். பாகிஸ்தான் அரசின் நடவடிக்கையை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் என்றார்.



இந்த நிலையில் பிபின் ராவத்தின் இந்த கருத்திற்கு தற்போது பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் கவாஜா அசிப் தனது டுவிட்டர் மூலம் பதிலளித்துள்ளார். மேலும் இந்தியாவிற்கு பகிரங்க மிரட்டலையும் பாகிஸ்தான் விடுத்துள்ளது. இது தொடர்பாக கவாஜா அசிப் பதிவுசெய்துள்ள டுவிட்டில் கூறியிருப்பவை வருமாறு:-

இந்திய இராணுவத் தளபதியின் பேச்சு மிகவும் பொறுப்பற்றது. இது அவரது பதவிக்கு ஏற்றதல்ல. இதன் மூலம் அவர் அணு ஆயுதச் சண்டைக்கு அழைப்பு விடுகிறார். ஒருவேளை அது தான் இந்தியாவின் ஆசை என்றால், அவர்கள் வந்து எங்களின் பலத்தை சோதித்து பார்க்கட்டும். யார் பலம் வாய்ந்தவர்கள் என்பது விரைவில் காட்டப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அவரைத் தொடர்ந்து பாகிஸ்தான் வெளியுறவு விவகாரத்துறை அமைச்சகச் செய்தித் தொடர்பாளர் முகம்மது பைசல் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், இந்திய இராணுவத் தளபதியின் பொறுப்பற்ற, மிரட்டல் தோணியிலான பேச்சு இந்தியாவின் கெட்ட எண்ணத்தை எடுத்துக் காட்டுகிறது. பாகிஸ்தான் தனது தாக்குதல், தடுப்புத் திறனைக் காட்டும். இதை சாதாரணமாக எடுத்துக் கொள்ளமுடியாது. அந்த வகையில் அவர்கள் எங்களை தவறாக எடைபோட வேண்டாம். பாகிஸ்தான், தன்னைக் காத்துக் கொள்ள முழுத் திறனுடன் உள்ளது, எனக் குறிப்பிட்டுள்ளார்.

## சிறையில் கன்னடம் கற்கிறார் சசிகலா!



பெங்களூர்,ஜன.15

பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறையில் சசிகலா கன்னட மொழியை ஆர்வத்துடன்கற்று வருகின்றார் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

சொத்து குவிப்பு வழக்கில் தலா 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகிய 3 பேரும் பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறையில் அடைக்கப்பட்டு உள் ளனர். பரப்பனஅக்ரஹாரா சிறையில் உள்ள கைதிகள் கன்னட மொழியை கற்க வேண்டும் என்பதற்காக, அவர்களுக்குச் சிறை நிர்வாகம் சார்பில் கன்னடம் பேசவும், எழுதவும் கற்றுக் கொடுக்கப்பட்டு வருகிறது. அதன்படி, சசிகலா, இளவரசிக்கும் கன்னடம் கற்றுக் கொடுக்கப்பட்டது. முதலில் இளவரசி மட்டும் கன்னடம் கற்பதில் ஆர்வம் காட்டினார்.

ஆனால், ஆரம்பத்தில் சசிகலா கன்னடம் கற்பதில் ஆர்வம் காட்டாமல் இருந்து வந்தார். ஆயினும், தற்போது சிறையில் நடக்கும் கன்னட வகுப்பில் இளவரசியுடன் சேர்ந்து சசிகலாவும் கலந்து கொண்டு வருகின்றார் எனவும், கன்னடமொழியைக் கற்பதில் அவர் ஆர்வம் காட்டி வருகின்றார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் கன்னட எழுத்துகளை நன்றாக எழுதுவதற்கு சசிகலா பழகிக் கொண்டுள்ளார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# ஜனவரி 26ஆம் திகதி முதல் தமிழகத்தில் சுற்றுப்பயணம்

சென்னை,ஜன.15

சென்னையில் நடைபெற்ற விழாவில் பங்கேற்ற நடிகர் கமலஹாசன், தமிழகம் முழுவதும் ஜனவரி 26ஆம் திகதி முதல் சுற்றுப்பயணம் செய்ய உள்ளேன் என அறிவித்துள்ளார்.




கமலஹாசன் தீவிர அரசியலில் ஈடுபடுவதில் உறுதியாக இருக்கின்றார். புதிய அரசியல் கட்சி தொடங்குவது தொடர்பாகக் கமலஹாசன் பல்வேறு அரசியல் பிரமுகர்கள், மூத்த தலைவர்களுடன் ஆலோசனை பெற்று வருகிறார்.

இதுதொடர்பாக அவர் கேரள முதலமைச்சர் பிரணாயி விஜயன், டில்லி முதலமைச்சர் கெஜ்ரிவால் ஆகியோரிடம் ஆலோசனை நடத்தினார்.

மேலும், கொல்கத்தா சென்ற கமல், மேற்குவங்க மாநில முதலமைச்சர் மம்தா பானர்ஜியை சந்தித்து, தனது அரசியல் பிரவேசம் தொடர்பாக ஆலோசனை செய்தார் எனக் கூறப்படுகிறது.

கடந்த மாதம் 7ஆம் திகதி கமல்ஹாசன் தனது பிறந்த நாளையொட்டி, பொதுமக்கள் கருத்தை அறிவதற்காக 'செயலி' ஒன்றைத் தொடங்கினார்.

அப்போது, அரசியல் கட்சி தொடங்குவது பற்றிய அனைத்து ஏற்பாடுகளும் நடந்து வருகின்றன. கட்சியின் பெயர் தொடர்பாக மக்களை நேரில் சந்தித்த பிறகு முடிவு செய்து அறிவிப்பேன். இதற்காக மாவட்டம் தோறும் சுற்றுப் பயணம் செய்வேன் என அவர் அறிவித்தார்.

சென்னையில் நடைபெற்ற விகடன் விருது வழங்கும் விழாவில் கலந்துகொண்ட நடிகர் கமலஹாசன் பேசுகையில், ஜனவரி 26ஆம் திகதி முதல் தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்யவுள்ளேன். சுற்றுப்பயணங்கள் குறித்த அனைத்து விவரங்களும் ஜனவரி 18ஆம் திகதி அறிவிக்கப் படும் என தெரிவித்துள்ளார். (ப)

# ஜெயலலிதா இல்லத்தை நினைவிடமாக மாற்றுவது மக்களை ஏமாற்றும் செயல்

ஜெயலலிதா இல்லத்தை நினைவிடமாக மாற்றுவது பொதுமக்களை ஏமாற்றும் செயல் என பெங்களூர் சிறையில் சசிகலாவை சந்தித்த பின் தினகரன் கூறினார்.

சொத்து குவிப்பு வழக்கில் சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் பெங்களூர் பரப்பனஅக்ரஹாரா சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

சசிகலாவை நேற்றுமுன்தினம் டி.டி.வி. தினகரன் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்புக்கு பிறகு தினகரன் நிருபர்களிடம் கூறியவை வருமாறு:-

அரசியல் ரீதியாக அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பாகச் சசிகலாவுடன் பேசினேன். எங்கள் அணியில் புதிய உறுப்பினர்களாக சேர இளைஞர்கள் உட்பட ஏராளமானவர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர். அவர்களுக்கு விண்ணப்பம் விநியோகம் செய்வது பற்றிச் சசிகலாவிடம் ஆலோசனை நடத்தினேன். அதற்கு அவர் ஒப்புதல் வழங்கியுள்ளார். இன்னும் பல விடயங்கள் குறித்தும் ஆலோசனைகள் நடத்தினோம்.

ஜெயலலிதா வாழ்ந்த இல்லத்தை நினைவு இல்லமாக மாற்றும் பணிகளை அரசு தொடங்கியுள்ளது. இதில் எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. 33 ஆண்டு காலம் ஜெயலலிதாவுடன் சசிகலா இருந்தார். அவருடைய முகவரியும் அந்த இல்லம் தான். நினைவு இல்லம் ஆக்கும் பணிகளை நல்ல படியாகச் செய்யட்டும். ஜெயலலிதா இல்லத்தை நினைவிடமாக மாற்றுவது பொதுமக்களை ஏமாற்றும் செயல் ஆகும்.

ஜெயலலிதாவின் திதி நிகழ்வுகள் நடக்கும்போது வருமான வரிச் சோதனை நடந்தது. அங்கு இருந்தவர்களைத் தமிழக அரசு விரட்டி அடித்தது. இது எங்களுக்கு வருத்தம் அளிக்கிறது. எடப்பாடி பழனிச்சாமி அரசுக்கு ஆர்.கே.நகர் இடைத்தேர்தலில் மக்கள் தக்க பாடம் புகட்டினர். அடுத்து வரும் தேர்தல்களில் எடப்பாடி பழனிச்சாமி அணியை மக்கள் புறக்கணிப்பார்கள் என்று தெரிவித்துள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்புலனற்றோர் உலகக் கிண்ணம்: இலங்கை அணி புதிய உலக சாதனை



கட்புலனற்றோருக்கான உலகக் கிண்ணப் போட்டிகள் வரலாற்றில், அணியொன்றால் பெற்றுக் கொள்ளப்பட்ட அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையாக நேபாள கட்புலனற்றோர் அணியுடன் நேற்றுமுன்தினம் நடைபெற்ற லீக் போட்டியில் 494 ஓட்டங்களைப் பதிவுசெய்த இலங்கை அணி புதிய உலக சாதனை படைத்தது.

கட்புலனற்றோருக்கான 40 ஓவர்கள் கொண்ட 5 ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் டுபாய் மற்றும் பாகிஸ்தானில் தற்போது நடைபெற்று வருகின்றன. டுபாயின் அஜ்மான் ஓவல் மைதானத்தில் நடைபெற்ற 10 ஆவது லீக் போட்டியில் இலங்கை மற்றும் நேபாள அணிகள் பலப் பரீட்சை நடத்தின.

இதன்படி, நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணித் தலைவர் சந்தன தேஷப்பிரிய முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். நிர்ணயிக்கப்பட்ட 40 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 494 ஓட்டங்களை இலங்கை கட்புலனற்றோர் அணி பெற்றுக் கொண்டது.

இதில் திமுது ரவீந்திர ஆட்டமிழக்காது 79 பந்துகளில் 168 ஓட்டங்களையும், சந்தன தேஷப்பிரிய ஆட்டமிழக்காது 62 பந்துகளில் 129 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து 495 என்ற இமாலய வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய நேபாள அணி, 33.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 154 ஓட்டங்களைப் பெற்று 340 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. அவ்வணி சார்பாக பர்தி 37 ஓட்டங்களையும், சுனில் தாபா 26 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக திமுது, தனிஷ மற்றும் சந்தன தேஷப்பிரிய ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தியிருந்தனர்.

போட்டியின் ஆட்ட நாயகன் விருதை திமுது ரவீந்திர பெற்றுக்கொண்டதுடன், பெறுமதிமிக்க வீரருக்கான விருதை சந்தன தேஷப்பிரிய பெற்றுக்கொண்டார்.

முன்னதாக இலங்கை அணி தாம் பங்குபற்றிய முதல் போட்டியில் ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக 485 ஓட்டங்களைக் பெற்றுக்கொண்டதுடன், அப்போட்டியில் 303 ஓட்டங்களால் அபார வெற்றியையும் பதிவு செய்தமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய கிரிக்கெட் அணியினருக்கு 2 நிமிடம் மட்டுமே குளிக்க அனுமதி



போட்டிகளின் பின்னர் இரண்டு நிமிடங்கள் மாத்திரமே குளிக்குமாறு இந்திய அணிவீரர்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி, தற்போது டெஸ்ட் தொடரில் பங்கேற்று விளையாடி வருகின்றது. இந்த நிலையில், போட்டிகளுக்குப் பின்னர் இரண்டு நிமிடம் மாத்திரமே இந்திய வீரர்களைக் குளிக்குமாறு கூறப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவின் தலைநகரான கேப் டவுனில் நீர் தீர்ந்துபோகும் நிலை உருவாகியுள்ளது. எதிர்வரும் மார்ச் மாதத்திற்குள் நீர் தீர்ந்துபோகலாம் என அண்மைய கணிப்புகள் தெரிவித்துள்ளன. கடந்த மூன்று வருடங்களாகப் பெய்த மிகக் குறைந்த மழை மற்றும் அதிகரித்துவரும் மக்கள் தொகையால் அதிகரித்துள்ள நீர் நுகர்வே இந்நெருக்கடிக்குக் காரணமெனக் கண்டறியப்பட்டுள்ளது.

கடல் நீரைக் குடிதண்ணீராக்குவது, நிலத்தடி நீர் சேகரிப்புத் திட்டங்கள், நீர் மறுசுழற்சி திட்டங்கள் போன்ற தீர்வுத் திட்டங்கள் மூலம் நீர்ப் பிரச்சினையைத் தீர்க்க தென்னாபிரிக்க அரசு வேகமாகச் செயற்பட்டு வருகின்றது. நீரைப் பாதுகாக்க வேண்டும் என்றும், ஒரு நாளைக்கு 87 லீற்றர் நீருக்கு மேல் பயன்படுத்த வேண்டாம் என்றும் தென்னாபிரிக்கான் கேப்டவுன் நகரிலுள்ள 40 லட்சம் மக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். காரை கழுவுவதற்கும், நீச்சல் குளங்களில் தண்ணீர் நிரப்புவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற தண்ணீர் தொடர்பான பிரச்சினைகள் கேப் டவுனில் மாத்திரமல்லாது, உலகளவில் கிட்டதட்ட 85 கோடி மக்களுக்குப் பாதுகாப்பான குடிதண்ணீர் கிடைப்பதில்லை என உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சச்சின் மகளைக் கடத்துவேன் என மிரட்டல்; கைதான வாலிபர் சிறையில் அடைப்பு



சச்சின் மகளைக் கடத்துவேன் என மிரட்டல் விடுத்துக் கைதான மேற்கு வங்க வாலிபர் சிறையில் அடைக்கப்பட்டார்.

முன்னாள் கிரிக்கெட் வீரர் சச்சின் வீட்டிற்கு அண்மையில் ஆசாமி ஒருவர் போன் செய்து, அவரது மகள் சாராவை விரும்பகின்றேன் என, அவரைக் கடத்தவுள்ளேன் எனவும் தொலைபேசியில் மிரட்டல் விடுத்தார். அந்த அழைப்பு மேற்கு வங்க மாநிலத்தில் இருந்து பேசப்பட்டிருந்தமை விசாரணையில் தெரியவந்தது.

இதையடுத்து பொலிஸார் மேற்கு வங்கம் விரைந்தனர். அங்கு வைத்து சாராவைக் கடத்த உள்ளேன் என மிரட்டிய தேவ்குமார் மித்தி (வயது 32) என்ற வாலிபரைக் கைது செய்தனர்.

அவர் டெண்டுல்கர் வீட்டுக்கு போன் செய்து மிரட்டியதை ஒப்புக்கொண்டார். தேவ்குமார் மித்தியின் குடும்பத்தினர் அவரை மனநலம் பாதிக்கப்பட்டவர் எனத் தெரிவித்தனர். பொலிஸார் அவரை விசாரணைக்காக மும்பை கொண்டு வந்தனர். அவர் மீது பிணையில் வெளிவர முடியாத பிரிவின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## காயத்திலிருந்து மீண்ட தனஞ்சய



இலங்கை வீரரான தனஞ்சய டி சில்வா காயத்திலிருந்து மீண்டுள்ள நிலையில் பங்களாதேஷிற்கு எதிரான தொடரில் பங்கேற்று விளையாடுவார் எனத் தெரிகிறது.

சிறந்த துடுப்பாட்டகாரராகவும், சுழல் பந்துவீச்சாளராகவும் விளங்கும் தனஞ்சய டி சில்வா, இலங்கை அணியின் சகலதுறை ஆட்டக்காரராகத் திகழ்கிறார்.

இந்திய அணிக்கு எதிரான மூன்றாவது டெஸ்டில் தனஞ்சய டி சில்வாவுக்கு காயம் ஏற்பட்டது, இதனால் ஓய்வெடுத்து வந்த நிலையில் தற்போது காயத்திலிருந்து மீண்டுள்ளார். எனவே, பங்களாதேஷிற்கு எதிரான தொடரில் களமிறங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இரு அணிகளும் மோதும் முதல் டெஸ்ட் போட்டி வரும் ஜனவரி 31 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனுக்கும் அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப்புக்கும் இடையில் நேற்று முக்கிய சந்திப்பு ஒன்று இடம்பெற்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் தமது கீச்சகத்தில் பதிவு ஒன்றை இட்டுள்ளார்.

*"முதலமைச்சர் விக்னேஸ்வரனுடன் தைப்பொங்கல் வாழ்த்துக்களைப் பரிமாறினேன்.*

*"வடமாகாண விவகாரங்கள் தொடர்பாகநல்லதொருகலந்துரையாடலை நடத்தினேன். குறிப்பாக, நிலையான தேசிய நல்லிணக்கம் மற்றும் அனைத்துக் குடிமக்களுக்குமான பிரகாசமான எதிர்காலத்தை உறுதிப்படுத்தும் வகையில் ஜெனீவா வாக்குறுதிகளை இலங்கை நிறைவேற்ற வேண்டியதன்தேவைகுறித்தும் கலந்துரையாடப்பட்டது."* என அமெரிக்கத் தூதுவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனீவா தீர்மான வாசகங்களை – குறிப்பாக பொறுப்புக் கூறல் தொடர்பான தனது உறுதிமொழியை – இலங்கை நிறைவேற்றாமல் காலத்தை இழுத்தடித்து வருகின்றது என்பதை அமெரிக்கத் தூதுவருக்குச் சுட்டிக் காட்டிய முதல்வர், இது விடயத்தில் இலங்கை அரசின் மீது அமெரிக்கத் தரப்பின் அழுத்தம் அவசியமானது என்பதையும் எடுத்துரைத்தார் என அறிய வந்தது.

வரும்பெப்ரவரிகடைசிவாரத்தில் ஜெனீவாவில் மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத்தொடரில் பிரதிபலிக்கத்தக்க வகையில்அமெரிக்கஅழுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் முதல்வர் வலியுறுத்தினார் என அறியவந்தது.

வறுமைக் கோட்டுக்குள் வாழும்குடும்பங்களைச்சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு உலக உணவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மதிய உணவுத் திட்டம் போதிய நிதி மூலம் இல்லாத காரணத்தினால் தடைப்படும் ஆபத்து இருக்கின்றமையைச் சுட்டிக் காட்டிய முதல்வர், அத் திட்டத்துக்கு அமெரிக்க உதவியை எதிர்பார்க்கிறார் என்றும் தூதுவரிடம் தெரிவித்தார்.

பொறுப்புக் கூறல் விடயம் தொடர்பாக முதல்வரின் கரிசனையைத் தமது நாட்டுத் தலைமைக்குத் தெரியப்படுத்துவார் எனக் குறிப்பிட்ட அமெரிக்கத்தூதுவர், மாணவர்களுக்கான உணவுத் திட்ட உதவிக் கோரிக்கை குறித்து அமெரிக்க காங்கிரஸின் அனுமதிக்குத் தாங்கள் காத்திருக்கின்றனர் என்றும் பதிலளித்தார் எனவும் அறிய வந்தது. (உ)

## 4 துப்பாக்கிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் பயன்படுத்திய ஆயுதங்களின் பயன்பாடு தொடர்பாக எழுதப்பட்ட – புத்தகமும் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

புலிகள் பயன்படுத்திய ஆயுதங்களை இந்தச் சந்தேக நபர் வைத்திருந்தார்என்றகோணத்திலும் பொலிஸ் விசாரணை நடைபெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மூன்றரைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

இவ் சம்பவம்பற்றி பொலிஸ் வட்டாரத்திலி ருந்து தெரிய வருபவை வருமாறு:–

மன்னார்முசலிபிரதேசசெயலகப்பிரிவுக்குட்பட்டகாயக்குழி கிராம பகுதியில்கடற்கரையை அண்டிய பகுதியிலிருந்து கஞ்சாப் பொதிகள் கடத்தப்படுவதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன எனக் கடற்படைத் தரப்பிலிருந்து பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. கடந்த வியாழக்கிழமை இரவு அப்பகுதியில் கடற்படையினருடன் சிலாபத்துறை பொலிஸார்மற்றும்மன்னார்போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸார் ஆகியோர் இணைந்து தேடுதல் வேட்டையில் இறங்கினர். அப்பொழுது 3 கோடியே 56 இலட்சம் ரூபா பெறுமதியான 356 கிலோகிராம்கேரளா கஞ்சாப்பொதிகள்கண்டுப்பிடிக்கப்பட்டன.

இந்த கஞ்சாப் பொதிகள் மன்னார் தென்கடல் ஊடாக இந்தியாவிலிருந்து கடத்தி வரப்பட்டு மன்னார் – சிலாபத்துறைப் பகுதியிலிருந்து வேறு இடத்துக்கு எடுத்துச் செல்லப்படுவதற்குத் தயார் நிலையில் இருந்தபொழுதே இவைபொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில்எவரும்கைது செய்யப்படவில்லையென பொலிஸார் தெரிவித்தனர்.

## முதன்மை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னார் மாந்தை பிரதேச சபைக்குட்பட்ட ஆட்காட்டிவெளி 6 ஆம் வட்டாரத்தில் உள்ளூராட்சித்தேர்தலில்உதயசூரியன் சின்னத்தில் முதன்மை வேட்பாளராக போட்டியிடும் சூசை சந்தானம் என்பரின் வீட்டின் மீதே தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்சம்பவம்குறித்துமுறைப்பாட்டாளர்பொலிஸில் தெரிவித்தவை வருமாறு:–

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் சுமார் ஆறு பேர் கொண்ட குழுவினர் தலையில் தலைகவசம்அணிந்துமோட்டர் சைக்கிள்மற்றும்ஆட்டோவிலும் வந்து இறங்கி வீட்டின் தலைவாயிலில் வீட்டுச் சின்னம் உள்ள விளம்பரத்தை ஒட்டிய பின் அவ்விடத்தில் ஒரு சில மணி நேரம் நின்று பட்டாசுகள் கொளுத்தி வளவுக்குள் எறிந்தனர். வீட்டின் கூரை மீது கற்களையும் எறிந்தனர்.

அத்துடன் என்னைத் தூண வார்த்தைகளால்ஏசிவீட்டுக்குள் இருந்து வெளியே வரும்படி மிரட்டினர். – எனப் புகாரிடப்பட்டுள்ளது.

இவ் தாக்குதல் நடாத்தி அட்டகாசம்புரிந்தவர்கள்அச்சமயம் மது போதையில் இருந்தனர் எனவும் பாதிப்புக்குள்ளானவர் பொலிஸில்முறையீடுசெய்துள்ளார்.

அவரின் வீட்டுக் கதவில் ஒட்டப்பட்ட வீட்டுச்சின்னத் தேர்தல் விளம்பரத்தை பொலிஸார் அகற்றினர்எனவும்தெரிவிக்கப்படுகிறது.

## மைக்ரோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போலிகளைஉருவாக்குவதைத் தடுக்க முடியும். பாதுகாப்பு அம்சங்க ளும் பல உள்ளன.

புதிய வகைக் கடவுச்சீட்டை வைத்திருப்போருக்கு நன்மைகளும் உண்டு. கடவுச்சீட்டு தவறவிடப்படும் போது, கைவிரல் அடையாளத்தை பதிவு செய்வதன் ஊடாக உடனடியாகப் புதிய கடவுச்சீட்டைப் பெறமுடியும். அத்துடன், பாதுகாப்பு அம்சங்கள் உள்ளடக்கியுள்ளதால் புதிய வகைக் கடவுச்சீட்டுக்கு சர்வதேச அங்கீகாரமும் கிடைக்கும்.

புதிய வகைக் கடவுச்சீட்டு 10 ஆண்டுகளுக்குச் செல்லுபடியாகும்.புதிதாகவரும்விண்ணப்பங்களுக்கே இந்தக்கடவுச்சீட்டு வழங்கப்படும்.தற்போது கடவுசீட்டை வைத்திருப்போர் அதன் செல்லுபடியாகும் காலம்வரை அதனைப்பயன்படுத்தமுடியும் என்று குடிவரவு குடியகல்வுத் திணைக்கள கட்டுப்பாட்டாளர் அதிபதி எஸ்.ரணசிங்க மேலும் தெரிவித்தார்.

## ஏமாற்றும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தலைமைகள் தொடர்ந்து தமிழ் மக்களை ஏமாற்றி வருவதனால்தான் நித்திரையா தமிழா... எனும் பாடலை ஒலிக்க விட்டோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

"அந்த நிகழ்வில் ஒலிக்க விடப்பட்டபாடல்தமிழர்எழுச்சிக் கானபாடல்.எந்தவிதமானஉள் நோக்கத்துடனும் அதைப்பார்க்கத் தேவையில்லை.

நாங்கள் சுதந்திரக் கட்சியை சேர்ந்தவர்கள்.

தமிழர் என்ற உணர்வு, உணர்ச்சி எப்பொழுதும் எம்மிடம் இருக்கும். தமிழ்த் தலைமைகள் எங்களைத் தொடர்ந்து ஏமாற்றிக்கொண்டு இருக்கும் போது, நாங்கள் நித்திரையாக இருக்க கூடாது. நித்திரையில் இருந்து எழுந்து வர வேண்டும். அதனால்தான் அந்தப் பாட்டை ஒலிக்க விட்டோம்.

அத்துடன், நாமலின் கேள்விக்கு உரிய நேரத்தில் உரிய இடத்தில் உரிய பதிலை வழங்குவேன்." – என மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரயில் நிலைய வீதி ஊடாக குருமன்காடு நோக்கிச் சென்ற கார் ஒன்று வீதியோரத்தில் குவிக்கப்பட்டு இருந்த கற்களுடன் மோதிவிபத்துக்குள்ளாகித்தடம் புரண்டுள்ளது.

விபத்து இடம்பெற்ற இடத்திலேயே ஒருவர் மரணமடைந்தார். இருவர் படுகாயமடைந்த நிலையில், அவர்கள் வவுனியாவைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் நேற்று அதிகாலை மரணமடைந்தார்.

ஐந்து பேர் பயணம் செய்த கார் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த மற்றும் படுகாயமடைந்தவர்களைத் தவிர, ஏனைய இருவர் குறித்தும் பொலிஸாரால் நேற்று மாலை வரை விவரம் பெற முடியவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்து தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (12)

### அம்பாந்தோட்டை – திஸ்ஸமாறமவில்

# பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளான மாணவி உயிரிழப்பு

அம்பாந்தோட்டை, ஜன.15

அம்பாந்தோட்டை – திஸ்ஸமாறம பிரதேசத்தில் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளான 14 வயதான மாணவி, அம்பாந்தோட்டை மருத்துவமனையில் சிகிச்சைபெற்றுவந்தநிலையில் நேற்று உயிரிழந்தார்.

இந்தச் சிறுமி, அண்மையில் மூன்று இளைஞர்களால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டார்.

இதனையடுத்து,பாதிக்கப்பட்ட மாணவிதனதுவீட்டில்,கழுத்தில் சுருக்கிட்டுதற்கொலைக்குமுயற்சித்தார்.

அதன்போதுஉறவினர்களால் மீட்கப்பட்டு,மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டிருந்தார்.

மாணவிதொடர்ந்தும்சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று உயிரிழந்தார் என மருத்துவமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆப்பு விழுந்திருக்கின்றது.

நிதி அமைச்சர் மங்கள சமரவீர இவ்விடயம் தொடர்பில் இரண்டு விதிமுறைகளில் தளர்வை ஏற்படுத்தினார்.

ஒன்று–மதுபானசாலைகளில் பெண்களும் இனிப் பணியாற்றலாம். 18 வயதுக்கு மேற்பட்ட பெண்களும் இனிமேல் மதுபானச் சாலைகளில் மதுவை வாங்க முடியும். அதற்கு எந்தத் தடையும் இருக்காது.

அடுத்தது – மது விற்பனை நிலையங்களைக் காலை 8 மணிக்கேதிறக்கலாம். இரவு 10 மணிவரை அவை இயங்கும்.

நிதி அமைச்சர் எடுத்த இந்த இரண்டுமுடிவுகளையும்இன்று முதல் இரத்துச் செய்து ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டிருக்கின்றார்.

முன்னைய ஒழுங்கு விதிகளைத் திருத்தும் வர்த்தமானி அறிவித்தலை நிதி அமைச்சர் கடந்த வாரம்தான் விடுத்தார். அவர் இப்போது வெளிநாட்டில்.

இந்தச் சமயத்தில் ஜனாதிபதி தமக்குள்ள மேலதிகாரத்தைப் பயன்படுத்தி அந்த முடிவுகள் இரத் துச் செய்யப்படுகின்றன என அறிவித்திருக்கின்றார்.

இதற்கு முன்னர் நிதி அமைச்சராகவிருந்த ரவி கருணாநாயக்காவுடனும்,லாட்டரிச்சீட்டு விலைஉயர்வுவிவகாரம்உட்பட பல விடயங்களில் ஜனாதிபதி தலையிட்டு, முரண்டு பிடித்து, முரண்டுபட்டு நின்றார் என்பது தெரிந்ததே.

நல்லாட்சி அரசில் ஐ.தே.கட்சி வசம் இருக்கும் நிதி அமைச்சுக்கும் ஜனாதிபதிக்கும் எப்பவுமே எட்டப் பொருத்தம் போலும்.

-மின்னல்.

## ஜனாதிபதியும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

மஹிந்தவின் காலத்தில் இடம்பெறாதவை இந்த அரசாங்கத்தில் இடம்பெறுகின்றன. மஹிந்தவின் காலத்தில் குற்றங்கள் கண்டறியப்படவில்லை. அமைச்சர்கள் தண்டிக்கப்படவில்லை.

இந்த அரசாங்கத்தில் மத்திய வங்கி முறி மோசடி தொடர்பில் நிதி அமைச்சர் பதவி நீக்கப்பட்டார். குற்றம் சாட்டப்பட்ட மத்திய வங்கி ஆளுநர் உடன் பதவி நீக்கம் செய்யப்பட்டார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெயாங்கொட பிரதேசத்தில் இடம்பெற்ற பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றும் போதேஅவர் இதனைக் கூறியுள்ளார்.

## வேட்பாளர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நம் செலுத்தப்படும்

– இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் ஆர்.எம்.ஏ.எல். ரட்நாயக்க தெவித்தார்.

இதுதொடர்பில்அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:–

உள்ளூராட்சி சபைகளுக்கான புதிய சட்டத்தின் அடிப்படையில் சமுர்த்தி உத்தியோகத்தர்கள்உள்ளிட்டவெளிக்கள உத்தியோகத்தர்கள் தாம் போட்டியிடுகின்ற வட்டாரத்தில் குறைந்தது ஒரு வருடத்துக்குள் பணியாற்றியிருக்க முடியாது. மேலும் வேட்பாளராக உள்ள அரச உத்தியோகத்தர் சம்பள மற்ற விடுப்பைப் பெற்றிருக்க வேண்டும்.

இந்த நடைமுறைகளைப் பின்பற்றாமல் எவராவது தேர்தலில் போட்டியிடுகின்றனரா? என்பதை ஆராயுமாறு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்குப் பணிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் சட்டத்தை மீறுகின்ற எந்தவொரு வேட்பாளரும் உள்ளூராட்சிச் சபை உறுப்பினராகத் தெரிவாவதற்குத்தகுதியற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

குற்றவியல் வழக்குகள் உள்ள வேட்பாளர்கள் தொடர்பில் அவர்களது கட்சிகளின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டு மேற்கொண்டு நடவடிக்கைஎடுக்கப்படும்.–என்றார்.

உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்தை மீறி, அரச உத்தியோகத்தர்கள் சுமார் 100 பேர் வேட்பாளர்களாக உள்ளனர் என 'பவ்ரல்' தெரிவித்துள்ளது.

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரையானகாலப்பகுதியிலேயே கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் பலர் பொலிஸ் பிணையிலும் சிலர் நீதிமன்றப் பிணையிலும் விடுவிக்கப்பட்டனர்.

தேர்தல்சட்டமீறல்கள்தொடர்பான 55 சம்பவங்கள் இது வரையில் பதிவாகியுள்ளன.

தேர்தல்சட்டங்களைமீறிய13 முறைப்பாடுகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை மட்டும் பதிவாகின. அவை தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் 9 பேர்கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இந்தப் பிரகிருதிகள் திருந்த மாட்டர்களா?

யாழ்.மாநகர சபையால் யாழ். பழையபூங்கா வீதியில்கழிவுகள்சேகரிக்கும்நான்குகொள்கலன்கள் யாழ்.பிரதேச செயலகத்திற்கு சமீபமாகக் காணப்படுகின்ற போதும் கழிவுகளை அவற்றில் போடாமல் அருகில் போடப்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது.

யாழ்.பிரதேசசெயலகம்,பழையபூங்கா,சிறுவர் பூங்கா, ஆளுநர் அலுவலகம், யாழ்.மாவட்ட செயலகம் போக்ற அரச அலுவ லகங்கள் இப்பகுதியிலேயே உள்ளன.

முக்கியத்துவம் மிக்க இந்தப் பகுதி சுகாதாரச் சீர்கேட்டுடன் அருவருப்பாகவும் காணப்படுகிறது.



இங்கு குப்பைகள் போடுபவர்கள் சிலரின் நடவடிக் கையால் அனைவருக்குமே இழுக்கு.. இவ்வாறானவர்கள் திருந்தமாட்டார்களா...? (இ-19)




சகோதரர்களான ராம்நாத் ஐயர், கோபிநாத் ஐயர் ஆகியோரின் வீணா/ கானாமிர்த இசை நிகழ்ச்சி அண்மையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. படத்தில் ஐயர் சகோதரர்களுடன் மிருதங்கக் கலைஞர் பிரம்மஸ்ரீ வரதராஜசர்மா ரமணா, சதாசிவம் வேல்மாறன், கடம் வாசித்த குமாரசாமி ரவிசங்கர் ஆகியோரும் காணப்படுகின்றனர். (இ









யாழ்.வைத்தீஸ்வரக்கல்லூரியின்மரதன்ஓட்டப் போட்டி கடந்த சனிக்கிழமை காலை 6 மணிக்கு கல்லூரி முன்பாக நடைபெற்ற போது அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்களுடன் லண்டன், கனடா, பழைய மாணவ சங்கப் பிரதி நிதிகளும் கலந்து கொண்டனர். (இ-19)

# வவுனியாவில் முன்னாள் போராளிகளுக்கு உதவி







பொங்கல் தினத்தை முன்னிட்டு வவுனியா தரணிக்குளம், கல்மடு 2 ஆம் யுனிட் பகுதியில் வறுமைக்கோட்டுக்குட்பட்ட முன்னாள் போராளிகள் இருவருக்கு 'கனடா கியுபைக் மொன்றியல் நகரைச்சேர்ந்த பாரவூர்தி சாரதிகள்' நற்பணி மன்றால் நேற்று உதவிகள் வழங்கப்பட்டன

முன்னாள் போராளிகள் ஆகிய நாங்கள் வறுமைக் கோட்டிற்குட்பட்டு கடும் வறுமைக்கு மத்தியில் வாழ்ந்து வருகிறோம் என கனடா கியுபைக் மொன்றியல் நகரை சேர்ந்த பாராவூர்தி சாரதிகள் நற்பணி மன்றத்தினருக்கு அறியத்தந்திருந்தோம்.

அதைஅடுத்து அவர்கள் இருவருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதிமிக்க அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய பொதிகளை வழங்கியுள்ளனர்.

இந்த உதவித்திட்டத்தை நற்பணி மன்றத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகளான பா.கதீஷன், பா. லம்போதரன், வ. பிரதீபன் ஆகியோர் வழங்கினர். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











யாழ். நகரில் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கை மின்சார சபையின் மின்பாவனையாளர் சேவை நிலையத்தில் அண்மையில் ஒளிவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வில் பிரதம மின்பொறியியலாளர்கள், மின்பாவனையாளர்கள், மின் பொறியியலாளர்கள், மின் அத்தியட்சகர்கள் மற்றும் பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

அதிதிகளின் உரைகளைத் தொடர்ந்து, குருநகர் புனித யாகப்பர் ஆலய மறைக் கல்வி மாணவர்களின் நடனம், கொழும்புத்துறை சென்.மேரிஸ் மாணவர்களின் நடனம், யாழ். வை.டபுள்யூ.சி.ஏ. மற்றும் இரட்சணியசேனை அமைப்பினர்களின் பாடல்களும் இடம்பெற்றன. (இ)





வல்வை உதயசூரியன் கடற்கரையில் நேற்று இடம்பெற்ற பட்டத் திருவிழாவின் போது எடுக்கப்பட்ட படங்கள்...




# யாழ். இந்துவின் பொங்கல் திருவிழா காட்சிகள்!





















யாழ். இந்துக் கல்லூரியின் பொங்கல் திருவிழா நிகழ்வுகள் நேற்று முற்பகல் 11.30 மணி முதல் நடைபெற்றன.

கலாசார நடைபவனி, தமிழர் விளையாட்டுகள், கிளித்தட்டு, பொம்மலாட்டம், ஒயிலாட்டம், சிலம்பாட்டம், மாட்டுவண்டிச் சவாரி என்று பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன.

கலாசார பவனியை கல்லூரி அதிபர் சதா.நிமலன், கல்லூரியின் பழைய மாணவனும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் உட்பட பிரமுகர்கள் கொடி அசைத்து ஆரம்பித்து வைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.01.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.